# சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானுடம்சார் கற்கைகளின் தற்போதைய நிலைமை: ஒரு தேடல் ஆய்வு[1]

ஃபர்ஸானா ஹனீஃபா
**சமூகவியல் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்**
*farzana@soc.cmb.ac.lk*

*''ஒரு தனிமனிதனாக மாத்திரமன்றி, ஒரு நல்ல பிரஜையாக இருக்கவும், தன்னைப் பற்றி மாத்திரமல்லாது, சமுதாயம் சார்ந்து சிந்திக்கவும், நடந்துகொள்ளவும், செயற்படவும், மாணவர்களுக்ுப் பயிற்சி அளிப்பது அவசியமாகும். நவீன வாழ்க்கையினது சிக்கலான அரசியல், பொருளாதார மற்றும் சமூகப் பின்னணியைப் புரிந்து கொள்ளக் கூடிய தன்மையும், சமூகத்திற்கும் தேசத்திற்கும் கடமை செய்யும் உணர்வும் ஒருவரை ஒரு நல்ல குடிமகனாக்குகின்றது. சமூகத்தின் நல்வாழ்வு என்பது கூட்டு நோக்கங்கள் பற்றிய சரியான தேர்விலேயே தங்கி இருக்கின்றது. அவையாவன: அரசியற் கொள்கை, கூட்டு இயக்கத்துக்கான பொறிமுறையின் செயற்றிறன், அரசியல் அரசாங்கம். ஜனநாயகத்தினைத் தோல்வி அடைய விடாது பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு இன்றைய ஒவ்வொரு குடிமகன் மீதும் உள்ளது. ஒரு கொள்கையின் திசை தொடர்பான உண்மையான விடயங்கள் பற்றிய அறிவினை அவர் கொண்டிருப்பதோடு, நோக்கங்கள் மற்றும் சிக்கல்களை மதிப்பிடுவதற்கான விவேகமும் அவருக்கு இருக்க வேண்டும். இந்தத் தகுதிகள் இல்லாத பட்சத்தில், தேசத்தின் தலைவிதி சரியான தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதனை யாராலும் உத்தரவாதப்படுத்த முடியாது. இதன் காரணமாகப் பாடசாலைகள் மீது ஒரு முக்கியமான பொறுப்பு சுமத்தப்படுகிறது. பாடசாலைகள் இந்தத் தேவையை நிறைவேற்றக் கூடிய வகையில், கல்வி முறைமையானது திட்டமிடப்படல் வேண்டும். பாடசாலைகள்*

---

[1] *ஃபர்ஸானா ஹனீஃபாவினால்* "Current Status of Social Science and Humanities Education: An Exploratory Study" *என்ற தலைப்பிலே ஆங்கிலத்தில் எழுதப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் கல்வியின் நூற்றாண்டினைக் குறிக்கும் வகையில் 2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட* Humanities and Social Sciences Education in Sri Lankan Universities: Past, Present, and Future (Volume III) *என்ற தொகுப்பிலே இடம்பெற்றிருக்கும் கட்டுரையின் தமிழ் வடிவமே இந்தக் கட்டுரை. தமிழ் மொழியாக்கத்திலே ஈடுபட்டோர்: சோகினா கிருபாகரன், நாகதீபிகா மாதவன் மற்றும் மகேந்திரன் திருவரங்கன்.*

*பாகுபாட்டினை உருவாக்கும் அரசியலைத் தவிர்க்க வேண்டும் என்றாலும், தேசத்தின் இளைஞர்களினது அரசியற் கல்விக்கான பொறுப்பிலே அவற்றுக்கு இருக்கும் பங்கினை அவை ஏற்க வேண்டும்".*

*கல்வி பற்றிய விசேட கமிட்டியின் அறிக்கை (சிலோன்), 1943*

***அறிமுகம்***

*மேலே பதிவிடப்பட்டுள்ள கூற்றானது கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய கன்னங்கரா அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்டதாகும். சுதந்திரத்தை எதிர்பார்த்திருந்த காலத்திலே இடம்பெற்ற கல்வி தொடர்பான உரையாடல்களில் இருந்து, தர உத்தரவாதம் மற்றும் வேலைக்கு அமர்த்தக் கூடிய தகைமை தொடர்பாக இன்று இடம்பெறும் கலந்துரையாடல்கள் வரை எமது கல்வித் துறையின் பயணமானது மிகவும் நீண்டது. இந்த ஆய்வறிக்கையானது மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானத்துறைகளிலே வழங்கப்படும் உண்ணாட்டுக் கற்கைநெறிகளை தரமுயர்த்துவது தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒரு நிலைக்குழுவின் சமீபத்திய முயற்சிகளை மதிப்பிடுவதாக அமைகிறது. இந்த முயற்சிகள் அதிகம் வெற்றி அடைந்த முயற்சிகளாகப் பலராலும் நம்பப்படுகின்றன. பல ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்புக்குள்ளான ஒரு பலவீனமான கல்வி அமைப்பில், மிக சமீபத்திய உயர் கல்வி சீர்திருத்தங்கள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றி எச்சரிக்கை செய்யும் நோக்கத்துடனும் இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானத்துறைகளினால் மேற்கொள்ளப்படக் கூடிய பங்களிப்பினை இந்த சீர்திருத்த செயல்முறையானது போதுமான அளவு உணரவில்லை எனவும், இந்தத் துறைகளினது முக்கியமான நோக்கங்களைப் பாதிக்கின்ற முறையிலேயே இந்தச் சீர்திருத்தச் செயன்முறை அமைந்திருந்தது எனவும் இந்தக் கட்டுரை வாதிடுகிறது. இந்தத் துறைகளைச் "சீர்திருத்த" எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் உண்மையில் இந்தத் துறைகளிலே வழங்கப்படும் கற்கைநெறிகளின் அடிப்படையையே குறைமதிப்பிற்கு உட்படுத்துவதோடு, இத்துறைகளினது நம்பகத்தன்மைக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றன. கல்விச் சீர்திருத்தக் கமிட்டியின் 1943 ஆம் ஆண்டு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட உணர்வுகளை மேற்கோள்காட்டி நான் இந்தக் கட்டுரையைத் தொடங்குகிறேன். அவ்வறிக்கையானது கல்விச் சேவையின் தேவையினை, பல்கலைக்கழகங்கள் கடந்த பல*

*வருடங்களாக உருவாக்கி வைத்துள்ள "வேலைக்கு அமர்த்தக் கூடிய தகைமை" (Employability) என்ற மிகக் குறுகிய வரம்பிற்குள் மாத்திரம் நிலைநிறுத்தக் கூடாது என்பதை நினைவூட்டுகின்றது.*

*வேலைக்கு அமர்த்தக் கூடிய தகைமையினை மையப்படுத்தி, மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களிலே சீர்திருத்தங்கள் முன்னிறுத்தப்படும் தற்போதைய சூழலில், இந்தத் துறைகளின் நம்பகத்தன்மையினை குறைத்து மதிப்பிடும் போக்கே அவதானிக்கப்படுகின்றது. நீண்ட காலப் புறக்கணிப்பு காரணமாக இத்துறைகள் எதிர்கொண்ட பாதிப்புக்களினைக் கருத்திற் கொண்டு, இத்துறைகளிலே பயிற்சியை வலுப்படுத்துவதற்கோ அல்லது ஆராய்ச்சிக்கான நிதியினை அதிகரிப்பதற்கோ தற்போது முன்னெடுக்கப்படும் சீர்திருத்தங்கள் முயற்சி செய்யவில்லை. மாறாக, இந்தத் துறைகளை அவற்றின் செயற்பாட்டிலிருந்து விலக்கி, வேலைவாய்ப்பினை உருவாக்கும் துறைகளாக எப்படி மாற்றியமைப்பது என்பதனை நோக்கியே சீர்திருத்தங்கள் பயணிக்கின்றன. இந்தப் புதிய நடைமுறையானது, இலங்கைப் பல்கலைக்கழக அமைப்பில் மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் கற்பிக்கப்படும் முறையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதனையும், அத்தகைய பாடங்களை உரிய முறையில் கற்பித்தால், இலங்கை சமூகத்திற்கும் ஒட்டுமொத்த குடிமக்களுக்கும் அவை கொண்டு வரக்கூடிய நன்மைகளை இந்தச் சீர்திருத்தங்கள் எவ்வாறு இல்லாமற் செய்கின்றன என்பதையும் இக்கட்டுரை விளக்குகிறது.*

*இலங்கையில் மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகள் எதிர்கொண்ட சரிவானது நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இது பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது. உதாரணமாக குமுது குசும் குமார என்ற ஆய்வாளர், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி ஆகிய இரண்டு விடயங்களையும் உள்ளூர் மொழிகளுக்கு மாற்றிய சுவபாஷ கல்வி முறையின் அறிமுகம், இந்த வீழ்ச்சிக்கு ஒரு காரணம் என்று வாதிட்டார்.*[2] *மொழிபெயர்ப்பு பாரம்பரியம் எதுவும் எமது நாட்டிலே இல்லாததும், பிற மொழிகளில் காணப்படும் விடயங்களை அணுகும் தன்மை குறைவாகக் காணப்படுகின்றமையும் கல்வியாளர்கள் தங்கள் துறைகளிலே உலகளாவிய ரீதியில் இடம்பெறும் விடயங்கள் குறித்து அறிந்துகொள்ள முடியாமைக்குக் காரணங்களாக அமைகின்றன (குமார,*

[2] Kumara, K. K. (2012) 'Social science and humanities education in Sri Lanka and its discontents: some reflections', *Dialogue*, 39, pp. 186-245.

*2012). அதேபோல, அவர்கள் தங்களுடைய ஆய்வுகளை வேறு மொழி சார்ந்த கல்விசார் குழுக்களிடம் பகிர முடியாமலும் உள்ளனர். இவ்வாறான ஒரு நிலைமையில், தொழில் ரீதியிலும், பதவி ரீதியிலும் மேலே மேலே செல்ல வேண்டும் என்ற குறிக்கோளுடன் இயங்கும் கல்வியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் கற்பித்தலில் கவனம் செலுத்தாமல், தமக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய அரசியல் தொடர்புகளினை உருவாக்குவதிலும், அதிகாரத்தில் இருப்போரின் அரவணைப்பினைப் பெறுவதிலுமே கவனம் செலுத்தினர். உலகளாவிய ரீதியில் கல்வி நிறுவனங்களுக்குள் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், இலங்கைச் சூழலில் அபாயகரமான ஒரு நிலையிலே இருக்கின்றன என்றும் குமார கூறியுள்ளார். திறமையற்ற மூத்த கல்வியாளர்கள் அனுபவிக்கும் முன்னுரிமைகளும் சிறப்புரிமைகளும், திறமையான இளையவர்களின் அறிவு மற்றும் கற்பித்தல் நடைமுறை என்பவற்றினை முன்னேற்றுவதற்குத் தடையாக அமைந்தன (குமாரா 2012). முறையான தொடர்புகள் இல்லாதமையினாலும், உரிய நிதியுதவி கிடைக்காமையினாலும், இளைய கல்வியாளர்களினால் தரமான கலாநிதிப்பட்ட பயிற்சிக்கான வாய்ப்புக்களைப் பெறமுடியமால் போயுள்ளது. மேலும் அவர்களிலே பலர் தாம் இளநிலைக் கல்வியைப் பெற்ற நிறுவனங்களில் இருந்தே கலாநிதிப் பட்டத்தினையும் பெற வேண்டிய நிர்ப்பந்தத்தினை எதிர்கொள்ளுவதுடன், பலரால் தங்களது பட்டப்பின் படிப்பினைப் பூர்த்தி செய்ய முடியாமலும் உள்ளது (குமார, 2012). பிற சூழல்களின் அனுபவங்களைச் சிறப்பானவை என மிகைப்படுத்தி நோக்கும் போக்கு குமாரவின் எழுத்துக்களிலே அவதானிக்கப்பட்டாலும், இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களிலே (குறிப்பாக உள்ளூர் மொழிகளில் கற்பிக்கப்படும் கற்கைநெறிகளிலே) இடம்பெறும் ஆராய்ச்சி மற்றும் இந்தத் துறைகள் எதிர்கொண்ட சரிவு பற்றிய முக்கியமான பகுப்பாய்வு குமாரவிடம் இருந்து எமக்குக் கிடைத்திருக்கிறது.*

*உள்ளூர் பல்கலைக்கழக அமைப்பில், அதிலும் குறிப்பாக மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளிலே, நோக்கப்படும் தரநிலைகளின் சரிவானது நிஜமான ஒன்றே. இந்தக் கட்டுரையின் இரண்டாவது பகுதியில் இந்தச் சரிவு பற்றித் தற்போது பணியாற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் விவரிக்கப்பட்டுள்ள விடயங்ளைப் பற்றி நான் ஆராய உள்ளேன். இந்த சீரழிவின் தன்மை மற்றும் அதைத் தடுப்பதற்கான வழிகள், இந்தக் கற்கைநெறிகளின் தரத்தை மேம்படுத்துவதற்குப் பரிந்துரைக்கப்பட்ட*

*சீர்திருத்தங்கள் பற்றிய பல பகுப்பாய்வுகள் மிகவும் தவறான அடித்தளங்களில் இருந்தும், நோக்குநிலைகளிலும் இருந்துமே வெளிவந்திருக்கின்றன. இந்தக் காரணத்தினால் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட சீர்திருத்தங்களினால் இந்தக் கற்கைநெறிகளின் தரத்தையும், பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் நிலையையும் உண்மையிலேயே மேம்படுத்துவதற்கு முடியாது போயுள்ளது.*

### *பகுதி I*

*2021 ஆம் ஆண்டின் மத்தியில், பொதுக் கணக்குகளுக்கான நாடாளுமன்றக் குழு, மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைநெறிகள் தொடர்பாக கணக்காளர்நாயக அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட கணக்கு அறிக்கையைப் பற்றி விவாதித்தது. இதன் போது, கல்வி தொடர்பான கொள்கை உருவாக்கத்தின் சில அனுமானங்களும், கருதுகோள்களும் மிகவும் தெளிவான முறையில் வெளிச்சத்துக்கு வந்தன.*[3]

*அவ்வறிக்கையில் இந்தத் துறைகள் குறித்துப் பின்வரும் விடயங்கள் சொல்லப்பட்டிருந்தன:*

*1. இலங்கையில் கல்வியில் பின்தங்கிய அல்லது தோல்வியுற்றவர்களின் கடைசித் தெரிவாகவே கலைத் துறை காணப்படுகின்றது.*

*2. அறிவியல் பாடங்களைக் கற்பிக்காத, பின்தங்கிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலைப் பிரிவைத் தமது மேற்படிப்புக்காகத் தெரிவு செய்கின்றனர்.*

---

*[3] இந்த அறிக்கையானது சிறந்த முறையில் தொகுக்கப்பட்ட ஆவணம் அல்ல. இருந்தாலும், இது பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் கலந்துரையாடப்பட்டதுடன், கொள்கை முடிவுகள் எடுக்கப்படுவதற்கு ஆதாரமாக இருக்கும் கலைக் கல்வி தொடர்பான பல அனுமானங்களினையும் உள்ளடக்குகிறது. இந்த கட்டுரை சமர்ப்பிக்கப்பட்ட மாநாடு இடம்பெறுவதற்கு முன்னர், இலங்கைப் பல்கலைக்கழக முறைமையினைச் சேர்ந்த மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் துறைகளைச் சேர்ந்த கல்வியாளர்களிடம் இருந்து இத்தகைய அனுமானங்களுக்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் பெரியளவிலான எதிர்ப்புக்கள் எவையும் எழவில்லை. தேசியக் கணக்காய்வு அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட Propensity to tend education under the Arts stream and the unemployment of Arts Graduates (கலைப் பிரிவின் கீழ் கல்வியைப் மேற்கொள்வதற்கான நாட்டமும் மற்றும் கலைப் பட்டதாரிகளின் வேலையின்மையும்) என்ற தலைப்பில் வெளியாகிய இந்த அறிக்கையினை http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2020/special_20/art/English-Report. pdf என்ற இணைப் பினூடாகப் பார்க்க முடியும்.*

*3. கலைப்பீடமானது எந்த வித திறன்களும், செயன்முறை அறிவும் இல்லாத, வெறுமனே கல்வியறிவும் கோட்பாட்டு அறிவும் உள்ள பட்டதாரிகளையே உருவாக்குகிறது.*

*4. வளர்ந்து வரும் ஒரு நாடு என்ற வகையில், இலங்கை, கல்வி அறிவு அல்லது கலைத்துறை அறிவை மட்டுமே கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவது பொருளாதார ரீதியிலே வீணானது. (நுண்கலைகள் ஒரு நாகரீகத்தினது அல்லது வளர்ந்துவரும் சமுதாயத்தின் ஒரு முக்கியமான பகுதியாக இருந்தபோதும்)*

*5. கலைக் கற்கைநெறிகளுக்கு அதிகளவு கேள்வி இருக்கிறது.*

*6. கலைப் பட்டப்படிப்பை தெரிவு செய்பவர்களில் அதிகளவானோர் பெண்களாக இருக்கின்றனர்.*

*7. பெரும்பாலான கலைப் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கின்றனர். (வேலையில்லாத் திண்டாட்டம் தொடர்பான நம்பகமான ஆராய்ச்சிகள் எதுவும் இல்லை.)*

*8. பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் பெரும்பாலான கலைப் பிரிவு மாணவர்கள் நாட்டின் ஏழ்மையான மாவட்டங்களினைச் சேர்ந்தோர்.*

*9. பெரும்பாலான கலைப் பட்டதாரிகள் அரசாங்க வேலைவாய்ப்பை விரும்புகின்றனர். (தனியார் துறையை விட அரச துறையிலேயே தொழிற் பாதுகாப்பு அதிகம் என்பதால், அரசாங்க வேலைவாய்ப்பு பெரிதும் விரும்பப்பட்டது.)*

*10. அனைத்துக் கலைப் பட்டதாரிகளிலும், ஆங்கில இலக்கியத்தினைப் படித்தவர்கள் மாத்திரமே 100% வேலைவாய்ப்பினைப் பெற்றனர்.*

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து பார்க்கும் போது, இவ்வறிக்கை முன்வைத்த கலைப்பிரிவு தொடர்பான விடயங்களில் ஒழுங்குத்தன்மை குறைவாக காணப்பட்டதோடு சில விடயங்களில் தொடர்புத் தன்மையும் இல்லாமல் இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மேலும் இவ்வறிக்கையானது பின்தங்கிய பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலை பீடங்களுக்குள் நுழைகிறார்கள் என்றும் கூறியது. கலைப் பட்டப்படிப்புகள் குறைந்தபட்ச தயாரிப்புடன் வரும் மாணவர்களுடன் ஈடுபட வேண்டிய கட்டாயத்தில் உள்ளன என்பதையும், இந்தப் பிரச்சினையை அடையாளம் கண்டு அதற்குத் தீர்வு வழங்காத ஓர் அமைப்பின் மூலம் திறமையான பட்டதாரிகளை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்ற தன்மையையும் இது அடையாளப்படுத்தவில்லை. கலைப் பிரிவுகளில் உள்ள ஆசிரியர்

மற்றும் மாணவர் விகிதங்கள், விஞ்ஞானப் பிரிவுகளிலிருக்கும் ஆசிரியர் - மாணவர்களின் விகிதத்திலிருந்து ஏன் வேறுபடுகின்றன என்பது பற்றியும் இந்த அறிக்கை குறிப்பிடவில்லை. மேலும், கலைப் பிரிவுகளில் உள்ள மூன்று வருட – நான்கு வருட பட்டப்படிப்பு திட்டங்கள், உள்ளக மற்றும் வெளியக பட்டப்படிப்பு, தொலைக்கல்வி திட்டங்கள் தொடர்பான வேறுபாடுகள் குறித்தும் இவ்வறிக்கை குறிப்பிடவில்லை. அனைத்து கலை பிரிவு திட்டங்களும் தோல்வியடைந்ததாக விவரிக்கும் போதிலும், பல்கலைக்கழக அமைப்பில் உள்ள நிறுவனங்களில் வளங்களின் வேறுபட்ட தன்மை மற்றும் தரவுகளை அணுகுவதில் உள்ள சிக்கல் குறித்தும் எந்தக் கருத்தையும் இவ்வறிக்கை தெரிவிக்கவில்லை.[4]

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களினை வைத்துப் பார்க்கும் போது, இந்த அறிக்கை முன்வைத்த கலைப்பிரிவு தொடர்பான விடயங்களில் ஒழுங்குத்தன்மை குறைவாக காணப்பட்டதோடு, சில விடயங்களுக்கு இடையில் இருக்கும் தொடர்புகளைக் கூட அறிக்கையினால் சுட்டிக்காட்ட முடியாது இருந்தமையினை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பின்தங்கிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களே கலை பீடங்களுக்குள் நுழைகிறார்கள் என்று அறிக்கை கூறுகிறது. ஆனாலும், கலைப் பட்டப்படிப்புகளின் போது குறைந்தபட்ச தயார்ப்படுத்தலுடன் வரும் மாணவர்களுக்கே கல்வி வழங்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதையும், இந்தப் பிரச்சினையை அடையாளம் காண்பதிலோ அதற்கு ஒரு தீர்வு வழங்குவதிலோ அக்கறை அற்ற ஒரு கல்வி அமைப்பின் மூலமாகவே இவ்வாறு நுழையும் மாணவர்கள் திறமையான பட்டதாரிகளாக மாற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்பது பற்றியும் அறிக்கை எதுவுமே சொல்லவில்லை (இது குறித்து குமார குறிப்பிடும் விடயங்களையும் கருத்திற்கொள்க). கலைப் பிரிவுகளில் உள்ள ஆசிரியர் - மாணவர் விகிதாசாரம் (ஓர் ஆசிரியருக்கு 18 மாணவர்கள்), விஞ்ஞானப் பிரிவுகளிலிருக்கும் ஆசிரியர் - மாணவர் விகிதாசாரத்தில் (ஓர் ஆசிரியருக்கு 10 மாணவர்கள்) இருந்து ஏன் வேறுபடுகின்றது என்பது பற்றியும், இந்த வேறுபாடு எவ்வாறு கலைப்பிரிவு மாணவர்களைப் பாதிக்கிறது என்பது பற்றியும் இந்த அறிக்கையில் எதுவுமே

[4] இந்த அறிக்கை தொடர்பாகப் பல்கலைக்கழகக் கட்டமைப்பில் உள்ள கல்வியாளர்களினால் முன்வைக்கப்பட்ட விமர்சன அறிக்கையை பார்க்கவும்: https://island.lk/myth-of-unemployable-arts-graduates/

குறிப்பிடப்படவில்லை. (முகாமைத்துவப் பாடங்களிலும் ஓர் ஆசிரியருக்கு 18 மாணவர்கள் என்ற விகிதாசாரம் பேணப்படுகிறது.) மேலும், கலைப் பிரிவுகளில் உள்ள மூன்று வருட – நான்கு வருட பட்டப்படிப்பு திட்டங்கள், உள்ளக - வெளியக பட்டப்படிப்புக்கள், தொலைக்கல்வி திட்டங்கள் போன்றவற்றுக்கு இடையில் இருக்கும் வேறுபாடுகள் குறித்தும் இவ்வறிக்கை பேசவில்லை. அனைத்து கலை பிரிவுடன் தொடர்பான கற்கைநெறிகளும் தோல்வியடைந்ததாக விவரிக்கும் இந்த அறிக்கை, பல்கலைக்கழக அமைப்பில் அவதானிக்கப்படும் வளங்களின் அசமத்துவம் மற்றும் வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் தமக்கான வளங்களைப் பெறுவதில் எதிர்நோக்கும் சிக்கல்கள் குறித்தும் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

கலை பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதனைக் காண்பிக்கும் வகையிலான கணிசமான, ஆழமான ஆராய்ச்சிகள் எதுவும் முன்னெடுக்கப்படிருக்கவில்லை. ஏற்கனவே நடாத்தப்பட்ட ட்ரேசர் ஆய்வுகள் (Tracer Studies) சந்தேகத்திற்குரிய மாதிரி முறைகளைக் கொண்டுள்ளன. கலைப் பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்குகிறார்கள் என்பதனைக் காண்பிக்கும் நம்பத்தகுந்த எந்த ஆதாரங்களும் அவற்றிலே இல்லை. (அறிக்கை இதனை ஒப்புக்கொள்கிறது.) மேலும், பெரும்பாலான பட்டதாரிகள் தமக்கு அரசாங்க வேலை கிடைக்கும் வரை தாங்கள் வேலையில்லாமல் இருக்கிறோம் அல்லது தமது தகுதிக்குக் குறைந்த வேலையினை செய்கிறார்கள் என்று கருதுகின்றனர் என்றும் அறிக்கை குறிப்பிடுகிறது. அந்த அறிக்கையிலே மேற்கோள்காட்டப்பட்டிருக்கும் வேலையின்மை பற்றிய கருத்துக்கள் கலை பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்க வேண்டிய பொறுப்பினை அரசு சுமக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் வைத்து உருவாக்கப்பட்ட கருத்துக்களாக அமைகின்றன. இந்த அறிக்கையின் தரம் கேள்விக்குறியானதாக இருக்கிறது. அத்துடன் பெரும்பாலான பட்டதாரிகள் பெண்கள் என்பதற்கும் இலங்கையில் ஊழியர் படையில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்புக்கு மிகவும் குறைந்த சதவீதமாக வெறும் 34% ஆக இருப்பதற்கும் இடையே ஒரு தொடர்பு இருக்கிறதா என்பது குறித்த பகுப்பாய்வுக்குரிய கூடுதலான ஆதாரம் எதனையும் அறிக்கை வழங்கவில்லை.[5] மானுடம் சார் கற்கைகள் மற்றும் சமூக

[5] இலங்கைக் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட Sri Lanka Labour force Statistics Quarterly என்ற அறிக்கையினைப்

*விஞ்ஞானங்களிலே பயிற்சி பெற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதா என்ற கேள்வியும் கவனிக்கப்படாமல் விடப்பட்டுள்ளது. இந்த மாநாட்டிற்கு பங்களிக்கும் பொருளாதார வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளபடி, அரசாங்கத்தின் வேலைவாய்ப்பினை உருவாக்கும் உத்திகள் விவசாயம் மற்றும் தொழில்களில் மாத்திரமே கவனம் செலுத்தியுள்ளன; ஏனைய சேவைகளின் அடிப்படையிலான வெள்ளைக் கொலர் தொழில்கள் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. உயர்கல்வி குறித்த கொள்கை உருவாக்கம் இரண்டு அனுமானங்களுடன் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது: வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைகளை வழங்க வேண்டியதன் அவசியத்தால் அரசு அதிக சுமையினை எதிர்கொள்ளுகிறது; கலை பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்கு ஏற்றவர்கள் என்று தனியார் துறை கருதவில்லை.*

*உயர்கல்வி நவதாராளமயமாக்கலுக்கு உள்ளாகுதல் பற்றிய விமர்சனம் இலங்கையில் மானுடம் சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களின் நிலை குறித்த உரையாடல்களில் போதுமான அளவுக்குக் கருத்திலே எடுக்கப்படவில்லை. பொதுவாக உலகம் முழுவதிலும் மற்றும் குறிப்பாக இலங்கையிலும் உயர்கல்வித் துறையின் சீர்திருத்தத்தில் நவதாராளவாதச் சிந்தனையின் தாக்கம் குறித்து தற்போது கணிசமான ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியாகியுள்ளன.*[6] *கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கும் நவதாராளவாதத் திருப்பம் உயர்கல்வியை நல்ல குடியுரிமைக்கான பாதையாக அல்லாது வேலைவாய்ப்பை நோக்கிய பாதையாகவே வடிவமைத்துள்ளது. ஒரு பட்டதாரிக்குத் தொழில் கிடைப்பது அல்லது அவர் ஒரு தொழிலினைச் செய்வது அவசியமாக இருக்கும் அதேவேளை, இந்த வரலாற்றுத் தருணத்திலே வேலைவாய்ப்பு என்ற குறிப்பானே கல்வி சீர்திருத்தச் செயன்முறைகளிலே குடியுரிமையின்*

---

*பார்ப்பதற்கான இணைய முகவரி: http://www.statistics.gov.lk/Resource/en/LabourForce/Bulletins/LFS_Q1_Bulletin_2020*

[6] *பார்க்கவும்:* Costa, R.C. (2019) 'The place of the humanities in today's knowledge society', *Palgrave Communications***,** 5(1). doi: https://www.nature.com/articles/s41599-019-0245-6; Cannizzo, F. (2018) 'Tactical evaluations: everyday Neoliberalism in Academia', *Journal of Sociology*, 54(1), pp, 77-91.; Gyamera, G. O. and Burke, P. J. (2018) 'Neoliberalism and curriculum in higher education: a post-colonial analyses', *Teaching in Higher Education*, 23(4), pp. 450-467.; Jayawardena, D. (2017) 'The "MacBurger", non-State universities and the changing landscape of higher education in Sri Lanka', *Journal for Critical Education Policy Studies*, 15(3), pp. 213-240.

பிற பண்புகளைக் காட்டிலும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட விடயமாக உள்ளது என்பது வருத்தமளிக்கிறது. மேலும், நவதாராளவாத நிலைமைகளின் கீழ், பல்கலைக்கழகங்கள் நிதி வலுவுடைய லாபம் ஈட்டும் நிறுவனங்களாகவே நடாத்தப்படுகின்றன.[7] முந்தைய சகாப்தத்தில், பல்கலைக்கழகம் என்பது அரசால் நிதியளிக்கப்பட்ட ஓரிடமாகவும், அங்கு விரிவுரையாளர்கள் "மாணவர்களை உண்மையைத் தேடவும், ஆர்வத்தைத் தூண்டவும், அறிவார்ந்த சாத்தியக்கூறுகளுடன் தம்மை ஈடுபடுத்தவும், கலை மற்றும் கலாச்சாரத்தை நயக்கவும், அறிவொளி பெற்ற அரசியல் மற்றும் பொது சேவையை நோக்கி செயல்படவும்" வைக்கக் கூடிய ஓர் இடமாகவும் பார்க்கப்பட்டது. (க்ராஸ்- ஜென்சன் மற்றும் கார்ஸ்டன், 2014) இன்று வேலைவாய்ப்பு என்பது உயர் கல்விக் கொள்கைக் கருத்தாடல்களை ஆட்சி செய்யும் ஒரு நிலையில், கல்வி பற்றிய முன்னைய மேற்கூறிய இலக்கு வெறும் கற்பனாவாதமாகவும், காலாவதியானதாகவுமே தெரிகின்றது[8].

இந்த நவதாராளமயமாக்கலின் ஒரு பகுதியாக, வெவ்வேறு இடங்களில் இருக்கும் பொறுப்புக்கூறற் செயன்முறைகளினைப் பொதுவான நியமங்களுக்கு உட்படுத்தல் அல்லது "கணக்fha;T" (Audit) செயல்முறைகளின் மூலம் பல்கலைக்கழகத்தினை ஒரு கார்ப்பரேட் மயமாக்கும் உலகளாவிய போக்கு இன்று அவதானிக்கப்படுகிறது. இவ்வாறான கணக்கீட்டுச் செயன்முறைகளை மேற்கொள்ளுவதே கார்ப்பரேட் மயமாக்குதலை நியாயப்படுத்துவதற்காகவே என்பதனையும் நாம் இங்கு விளங்கிக்கொள்ளுவது அவசியம். நம்பகத் தன்மையற்ற முறையில் முன்னெடுக்கப்படும் பல்கலைக்கழகங்களை நிலையிடுவதற்கான செயன்முறைகள், அதிகளவிலான கல்லூரிக் கட்டணங்களை (அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும்) நிறுவுதல், மாணவர்களை நுகர்வோராக நடாத்துதல், கல்வி அனுபவத்துடன் தொடர்புபடாத ஏனைய சேவைகளைப் பல்கலைக்கழகம் வழங்குதல் போன்றனவற்றினை இந்தக் கார்ப்பரேட் மயமாக்கும் போக்கினுடைய வடிவங்களாக நாம் அடையாளப்படுத்தலாம். பல்கலைக்கழகத்தின் நிர்வாக ஆளணியில் அதிகரிப்பு மேற்கொள்ளப்படுகிறது. ஆனால்

---

[7] Uyangoda, J. (2018) 'University governance and autonomy in Sri Lanka: changing contexts and directions', *Dialogue*, 45 & 46. and Manurathna, P. (2018) 'University & co.: the neoliberal university and the challenges faced by arts faculties in Sri Lanka', *Dialogue*, New Series 40 & 41.

[8] Krause-Jensen, J. and Garsten, C. (2014) 'Introduction: neoliberal turns in higher education', *Learning and Teaching: The International Journal of Higher Education in the Social Sciences*, 7(3), pp. 1–13.

*அதேவேளை பல்கலைக்கழகத்தின் கல்வி வழங்கலுடன் தொடர்புபட்டவர்கள் அதிகளவிலே ஓரங்கட்டப்பட்டு வருகிறார்கள். பல்கலைக்கழகம் எந்தத் திசையில் செல்லவேண்டும் என்பதனைத் தீர்மானிப்பதிலே கல்வியாளர்களுக்கு ஒரு சிறிய இடம் கூட இல்லாத நிலையே நோக்கப்படுகிறது. மேலும், பல்கலைக்கழகத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பான பணியாளர்கள் சம்பள உயர்வுகளைப் பெறும் அதேவேளை, கல்வி வழங்கற் துறையிலே பணியாற்றுவோரின் நிலைமை இக்கட்டான ஒன்றாக மாறி வருகிறது. கல்வி வழங்கலில் உதவி சார் பதவிகளின் உருவாக்கம், ஒப்பந்த அடிப்படையிலான சேவைகளின் உருவாக்கம் என்பவற்றின் மூலமும், நிரந்தரப் பதவிகளைக் குறைப்பதன் மூலமும் பல்கலைக்கழகத்தின் கல்வி வழங்கும் துறை வலுவிழக்கச் செய்யப்படுகின்றது. உலகளாவிய ரீதியிலே, கட்டணம் வசூலிக்கும் பல்கலைக்கழகங்களிலே வசூலிக்கப்படும் கட்டணம் பாரிய அளவிலே உயர்ந்துள்ளது. கல்லூரிகள், குறிப்பாக அமெரிக்காவில் உள்ள கல்லூரிகள், தாங்கள் பெருமைப்படும் விடயமாகப் தமக்கிடையிலான போட்டித்தன்மையினை முன்னிறுத்தும் வியாபார மனநிலையும் இன்று அவதானிக்கப்படுகிறது.[9](ஹார்வாட் பல்கலைக்கழகம் தனது பல்கலைக்கழகத்திலே கற்பதற்கு விண்ணப்பிக்கும் 5% ஆன மாணவர்களை மாத்திரமே உள்வாங்குகிறது.) மாணவரை நுகர்வோராகவும், கல்வியினை ஒரு தனிப்பட்ட முதலீடாகவும் கருதும் இந்த மாதிரியான பார்வை இன்று பரவலாக விமர்சிக்கப்படுகிறது. கல்வியினை ஒரு உரிமையாகவும், சமூகத்தின் ஓர் அத்தியாவசியத் தேவையாகவும் பார்க்கும் போக்கு அருகி வருகிறது. இலங்கையின் கல்விக் கொள்கையினை உருவாக்கும் தரப்பினர் இந்த விமர்சனங்கள் குறித்துப் போதுமான அளவுக்கு அறிந்திராமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானது.*

*வெவ்வேறு பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் கல்வித் தகைமைகளினை உலகெங்கிலும் உள்ள முதலாளிகள் ஒரே நேரத்தில் இலகுவில் அடையாளம் காணக்கூடிய வகையில் ஒரு பொதுநியமத்தின் கீழ், தரப்படுத்தும் போக்கும் இப்போது அவதானிக்கப்படுகின்றது. இந்தக் கருத்தியலின் அடிப்படையிலேயே இலங்கைக்கான தகைமைகளின் கட்டமைப்பு அல்லது எஸ்.எல். க்யூ. எஃப் (SLQF) உருவாக்கப்பட்டது. இவ்வாறான தரப்படுத்தல் செயற்பாடுகளின் காரணமாக எவற்றை எல்லாம் எமது பல்கலைக்கழகங்களும்,*

[9] பார்க்கவும்*: https://www.dissentmagazine.org/article/the-corporatization-of-higher-education*

மாணவர்களும் இழக்கிறார்கள் என்பது குறித்துக் கல்விக் கொள்கையினை உருவாக்குவோர் எந்த விதத்திலும் கரிசனை காட்டுவதில்லை. மேலும், இவ்வாறு இழக்கப்படும் விடயங்கள் குறித்துப் பகுப்பாய்வு செய்வதற்கு அவசியமான திறன்கள் தொடர்பிலே பயிற்சிகளை வழங்குவதற்கு ஒதுக்கப்படும் நிதி போதுமற்றதாக இருப்பதுடன், வழங்கப்படும் பயிற்சிகளும் குறைபாடுகளை உடையவையாக உள்ளன. ஒரு பாடநெறி செல்ல வேண்டிய திசையைத் தீர்மானிக்கும் போது மாணவர்களின் தேவைகளைக் கருத்திலே எடுத்து, அவற்றினை ஆக்கப்பூர்வமான முறையில் தீர்த்துவைப்பதற்கான சந்தர்ப்பங்கள் இழக்கப்படுதல், நிர்வாக மற்றும் கணக்fha;Tப் பணிகளுக்காக ஒரு விரிவுரையாளர் அதிக நேரத்தை விரயமாக்குதல், தரப்படுத்தலினை மேற்கொள்ளுவதற்காகக் கற்கை நெறிகளை எளிமைப்படுத்துதல், நாம் என்ன செய்தோம் என்பது தொடர்பிலே ஆவணங்களையும், அறிக்கைகளையும் உருவாக்க வேண்டும் என வலியுறுத்துதல், நாம் எமது கடமைகளைச் செய்திருக்கிறோமா என மதிப்பிடுவதற்கும், எம்மால் வழங்கப்படும் கல்வியின் தரத்தினை மதிப்பிடுவதற்கும் அறிக்கைகளினையும், ஆவணங்களினையும் மாத்திரம் அளவுகோல்களாக நோக்குதல் போன்றன, கல்வியில் இன்று அவதானிக்கப்படும் தரப்படுத்தலின் மோசமான விளைவுகளாக இருக்கின்றன. (மனுரத்னா, 2018) ஒரு குறித்த பல்கலைக்கழகம் அல்லது வளாகம் அமைந்துள்ள இடத்தில் நிலவும் உள்ளூர் சமூக சூழல் மற்றும் அப்பல்கலைக்கழகத்திலே கற்கும் மாணவர்களின் வர்க்க மற்றும் கல்விப் பின்னணி போன்றன அந்தப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் கற்பித்தல் நடைமுறையைத் தீர்மானிப்பதில் மிகவும் முக்கியத்துவம் வகிக்கின்றன. இவை பற்றி இந்தக் கட்டுரையின் அடுத்த பகுதியில் தெளிவுபடுத்தப்படும். சமூகம் குறித்த விமர்சன ரீதியிலான பார்வையினை மாணவர்கள் தம்மத்தியிலே வளர்த்தெடுக்க வேண்டும் என்பது பற்றியோ, அல்லது அவ்வாறான ஒரு பார்வையின் ஊடாக ஒரு குறித்த சமூகத்தில் தற்போது இருக்கும் சூழ்நிலையினைத் தாண்டி, சமத்துவமின்மை பற்றி மாணவர்கள் விசாரிக்க வேண்டும் என்பது பற்றியோ அல்லது சமூகத்தினால் ஜனரஞ்சகமான முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் விடயங்களினது மறைவாக இருக்கும் விளைவுகள் குறித்து அவர்கள் கேள்விகளை எழுப்ப வேண்டும் என்பது பற்றியோ, கல்வி தொடர்பாகத் தற்போது இடம்பெறும் புதிய கலந்துரையாடல்களில் குறிப்பிடத்தக்க வகையில் எதுவும் பேசப்படுவதில்லை.

இலங்கையின் கலைத்துறைக்கான பட்டப்படிப்புத் தொடர்பிலே எதிர்பார்க்கப்படும் மாற்றம் குறித்த ஒரு முக்கியமான அவதானிப்பை பிரபா மனுரட்ன வெளியிட்டிருக்கிறார். இலங்கையினது கல்வித் தகைமைகளுக்கான கட்டமைப்பிலே (எஸ். எல். கியூ. எஃப்), கற்றல் விளைவுகள் குறித்து முன்வைக்கப்படிருக்கும் விதிகளை நோக்குகையிலே, மனித வள மேலாண்மைப் பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட அறிவு, ஆற்றல் மற்றும் திறன்கள் தொடர்பான பொதுமைப்படுத்தப்பட்ட பட்டியலுக்கும், பணியாளர்களை வேலையிலே தக்கவைத்தல் பற்றிய சிந்தனைக்கும் மேலதிகமாக, நான்கு புதிய காரணிகள் அங்கே உள்ளடக்கப்பட்டுள்ளமையினை அவதானிக்க முடிகிறது. மனுரத்னா "மைண்ட்செட்" (mindset - மன அமைப்பு) என்று பெயரிடும் இந்தப் புதிய கட்டமைப்பு, பின்வரும் கற்றல் விளைவுகளை உள்ளடக்குகிறது: மனப்பாங்குகள், விழுமியங்கள், தொழில்முறைத் தன்மை மற்றும் வாழ்க்கைக்கான பார்வை.[10] மனுரட்ன கூறுவது போல், இங்கு கலைக் கல்வியின் "தோல்வி" என்பது எஸ். எல். கியூ. எஃப் கட்டமைப்பில் விவரிக்கப்பட்டுள்ள சந்தையின் எதிர்பார்ப்புடன் தொடர்புபட்ட விடயங்களுக்கும், இலங்கையில் உள்ள கலைப் பீடங்களுக்குள் நுழையும் நிஜமான மாணவரின் தன்மைக்கும் இடையில் இருக்கும் பொருத்தப்பாடின்மையிலேயே நோக்கப்படுகிறது.[11]

கலைப் பீடங்களுக்குள் எதிர்பார்க்கப்படும் தர மேம்பாடு மாணவர்களின் வர்க்கப் பின்னணியின் காரணமாக அவர்கள் எதிர்கொள்ளும் தாக்கங்களை அவர்களுக்கு வழங்கப்படும் கல்வியின்

[10] *The Sri Lanka Qualifications Framework, cited in Manuratna 2018. p. 120.*
2017 ஆம் ஆண்டின் தொழிலாளர்களுக்கான கேள்வி பற்றிய கணக்கெடுப்பானது, முதலாளிகளின் பார்வையில் மிகவும் தேவைப்படும் வேலைகளாகக் கருதப்படுபவற்றினை -யே குறிப்பிடுகின்றது. தையல் இயந்திர ஆபரேட்டர்கள், பாதுகாப்புக் காவலர்கள், பிற தயாரிப்புத் தொழிலாளர்கள், கடை விற்பனை உதவியாளர்கள், விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் வல்லுநர்கள், வணிக மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள், வேலைத்தளங்களிலும், ஹோட்டல்களிலும் மற்றும் பிற நிறுவனங்களிலும் பணியாற்றும் துப்புரவுத் தொழிலாளர்களும் ஏனைய வேலையாட்களும், உற்பத்தி மேற்பார்வையாளர்கள், பொது அலுவலக எழுதுவினைஞர்கள், வியாபாரத் தளங்கள் மற்றும் சந்தை விற்பனையாளர்கள் போன்ற வேலைகளை இந்தக் கணக்கெடுப்பு உள்ளடக்குகின்றது. விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் வல்லுநர் தொழிலினைத் தவிர, கலைப் பட்டதாரிகள் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் ஏனைய வேலைக்கு பொருத்தமற்றவர்களாக இருக்கக் கூடும். இந்தப் பட்டதாரிகளின் திறன்களை பயனுள்ள முறையில் பயன்படுத்த அரசு தரப்பில் இருந்து எந்தவிதமான முயற்சியும் எடுக்கப்படவில்லை.

[11] *Manurathna, P. (2018) 'University & co.: the neoliberal university and the challenges faced by arts faculties in Sri Lanka', Dialogue, New Series 40 & 41.*

மூலம் மாற்ற முற்படுவதாக மனுரட்ன குறிப்பிடுகிறார்.[12] "மென் திறன்கள்" என்று விவரிக்கப்படும் சில நவதாராளமயமாக்கல் முயற்சிகள் மாணவர் அமைப்பால் எதிர்க்கப்படும் என்றே தெரிகிறது. ஏனெனில் கலைப் பீடங்களில் கற்கும் மாணவர்களின் தொகையில் பெரும் பகுதியினர் பாரம்பரியமாக நடுத்தர வகுப்பினரிடமிருந்து ஒதுக்கப்பட்ட சமூகக் குழுக்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். அல்லது மனுரட்னவினால் "மற்றவர்களைப் பின்பற்றி வாழும் சமூகம்" என விபரிக்கப்படும் நடுத்தர வர்க்கத் தரப்பினர் குறித்து இந்த மாணவர்கள் நன்மதிப்பு இல்லாதவர்களாக இருக்கிறார்கள். வேலை வாய்ப்புக்காக இந்தப் போலி நடுத்தர வர்க்கத்தின் அடையாளத்தைத் தாமும் இப்போது ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தினை எதிர்கொள்ளும் இந்த மாணவர்கள் நடுத்தர வர்க்கத்தின் குறியீடுகளாகக் கல்வியில் இடம்பிடித்திருக்கும் விடயங்களை புறக்கணிக்கக் கூடும். இதனால் அவர்கள் மீண்டும் வேலைவாய்ப்புக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

மனுரட்னவின் வாதத்திற்கு ஆதரவான மேலும் ஒரு அம்சம் என்னவென்றால், விமர்சனபூர்வக் கற்பித்தலிற்கு வழிகாட்டியாக இருக்கக் கூடிய விமர்சனக் கோட்பாடுகள், மிகவும் பலவீனமான முறையில் முன்னெடுக்கப்படும் கலை மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைநெறிகளுக்குக் கூட அடித்தளமாக இருக்கின்றன. ஆனால் உண்மையில் தனியார் துறை தனது தொழிற்படையினைச் சேர்ந்தோர் இந்த விமர்சனக் கோட்பாடுகள் குறித்து அறிவுபெற்றவர்களாக இருப்பதனை விரும்புவதில்லை. பல்கலைக்கழகங்கள் சமூகத்தில் இருக்கும் வர்க்க ரீதியிலான குறைகளை வெளிப்படுத்துவதற்கான களங்களையும் வெளிகளையும் மாணவர்களினால் முன்னெடுக்கப்படும் அரசியற் செயற்பாடுகளின் ஊடாக மட்டுமல்லாது, பல்கலைக்கழகங்களிலே வழங்கப்படும் கல்வியினூடாகவும் உருவாக்கிக் கொடுக்கின்றன. வேலைத் தேவைகளுக்கு அப்பாற்பட்ட எந்தச் சிந்தனைக்கும் இடம் இல்லாத, கடுமையாக ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் இயங்கும் தனியார் துறையிலே இந்த மாதிரியான விமர்சனப்பாங்கான கற்றலுக்கு குறைந்த அளவு இடமே இருக்கிறது.

---

[12] மேலே மேற்கோள் காட்டப்பட்ட ஒடிட் அறிக்கையானது இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மட்டங்களினைச் சேர்ந்த வழக்கமான ஒரு கலைப் பட்டதாரியினைக் குறிப்பதாக அமைகின்றது.

கலைப் பட்டதாரிகளின் வேலைக்கு அமர்த்த இயலாத் தன்மை தொடர்பான அனுமானங்கள் குறித்து மனுரட்னவினால் போதுமான அளவில் விளங்கப்படுத்தப்படவில்லை. உதாரணமாக, சமூகவியல் சிறப்புக் கலைமாணித் துறையினைச் சேர்ந்த எங்கள் மாணவர்களில் சிலர் தாங்கள் எதிர்கொள்ளும் வேலையின்மை குறித்து எங்களுக்குத் தெரிவிக்கிறார்கள். இந்தத் துறையினைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் தங்கள் கற்கையினை முடித்த பின்னர் மிக விரைவாகத் தொழில் பெறுகிறார்கள். அவர்களுக்கு ஆங்கில மொழித் திறன் இருக்குமேயானால், தொழில் தொடர்பிலே அவர்களுக்குக் கூடுதல் தெரிவுகள் வாய்க்கின்றன. மேலும், மேலே குறிப்பிட்டுள்ள வேலையின்மை பற்றிய கருதுகோளினை உறுதிப்படுத்தும் வகையில் எந்த ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வேலைக்கு அமர்த்த முடியாத பட்டதாரிகள் என்ற கட்டுக்கதை பல்கலைக்கழகப் பட்டதாரிகள் தனியார் துறை வேலைகளில் ஆர்வம் காட்டாது இருப்பதனாலும், அரச பல்கலைக்கழகப் பட்டதாரிகள் குறித்துத் தனியார் துறையினைச் சேர்ந்த தொழில் வழங்குநர்கள் மத்தியில் இருக்கும் "மோசமான மனப்பாங்கு" காரணமாகவுமே உருவாகிறது.[13] ஒரு குறிப்பிட்ட சமூக வகுப்பினர் தவிர்ந்த ஏனையோர் மத்தியில் தனியார் துறை வேலைகளினைக் காட்டிலும் அரசாங்க வேலைகள் மீதான விருப்பம் அதிகளவில் இருக்கிறது என்பது மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. அரசாங்கம் பல்வேறு தொழில்களுக்கான விண்ணப்பங்களைக் கோரும் போது, வேறு வேலைகளில் இருக்கும் பலர் தாம் அப்போது வகிக்கும் பதவிகளைக் கைவிட்டு, அரசாங்க நியமனத்தையே எடுத்துக் கொள்ள விரும்புகிறார்கள். மேலும், அரச பட்டதாரிகளின் வேலைக்கு அமர்த்தக் கூடிய தன்மை குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் பெறப்பட்ட முடிவுகளைக் காட்டிலும், தனியார் துறைத் தொழில் வழங்குநர்களின் வர்க்கச் சார்பான தேவைப்பாடுகளும், அரச பல்கலைக்கழகப் பட்டதாரிகளின் வேலைக்கு அமர்த்தக் கூடிய தன்மை தொடர்பாக தனியார் தொழில் வழங்குநர்கள் மத்தியில் இருக்கும் முற்கற்பிதங்களுமே கொள்கை உருவாக்குவதிலே அதிக தாக்கம் செலுத்துவது போல தெரிகிறது.

[13] 2017 ஆம் ஆண்டின் இலங்கையின் தொழிலாளர் கேள்விக் கணக்கெடுப்பின் 17 ஆம் பக்கத்தில், "பல்கலைக்கழகங்கள் அல்லது பிற உயர் கல்வி நிறுவனங்களில் இருந்து வரும் வேலை தேடுபவர்களின் மனப்பாங்கிலே பிரச்சினைகள் இருப்பதுடன் அவர்கள் ஊக்கமற்றவர்களாகவும் இருப்பதாக 17.1 சதவீத நிறுவனங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*மானுடம் சார் கற்கைகளினாலும், சமூக விஞ்ஞானங்களினாலும் சமூகத்துக்கு வழங்கக் கூடிய அறிவு குறித்து கொள்கை வகுப்பாளர்களிடையே மிகக் குறைந்த அங்கீகாரம் அல்லது ஏற்றுக்கொள்ளலே நிலவுகிறது என்பதனைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டலுடன் மேற்கொள்ளப்பட்ட தர உத்தரவாத செயல்பாடு தெளிவுபடுத்துகிறது. இலங்கைத் தகைமைகள் கட்டமைப்பிலே (எஸ். எல். கியூ. எஃப்) கொடுக்கப்பட்டுள்ள நிலை விளக்கங்களைப் (Level Descriptors) பற்றிய ஒரு மேலோட்டமான பார்வை கூட, இந்த நிலை விளக்கங்களை உருவாக்குகையில், மானுடம் சார் கற்கைகளில் இருந்தும், சமூக விஞ்ஞானங்களில் இருந்தும் மிகவும் சிறிய உள்ளீடே பெறப்பட்டிருக்கிறது என்பதனை வெளிப்படுத்துகிறது. மனுரட்ன குறிப்பிட்டுள்ளபடி, இந்த நிலை விளக்கங்களின் உருவாக்கத்துக்கு அடிப்படையாக இருந்த கற்றல் விளைவுகளினை முன்வைத்த முறையானது, தொழில் முனைவோர் கல்வியிலிருந்தே பெறப்பட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. இலங்கைச் சூழல் தொடர்பான குறிப்பிட்ட தேவைகள் சேர்க்கப்பட்டமைக்கான காரணம் வர்க்கக் குறிகாட்டிகளை மாற்றுவதன் அடிப்படையில் மாத்திரமே தவிர, நாடு எதிர்கொள்ளும் முக்கியமான சமூகப் பிரச்சினைகள் குறித்து இருக்கும் அறிவு தொடர்பிலே நிலவும் இடைவெளிகளைப் பற்றிய எந்த புரிதலும் இங்கே வெளிப்படுத்தப்படவில்லை. உதாரணமாக, உயர் கல்வித் துறையினைப் பெண்களுக்கு உரிய ஒன்றாக மாற்றும் போக்கும் இங்கு அவதானிக்கப்படுகிறது. இருப்பினும், தொழிற்படையில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு குறைவாகவே உள்ளது. இன-மத மோதல்கள் நாட்டின் பொருளாதாரம் உட்பட எல்லா வழிகளிலும் நாட்டினைப் பாதிக்கும் ஒரு பிரச்சினையாக உள்ளது. ஆனால் பொருளாதாரத்தின் மீது அதிக கவனத்தினைக் குவிக்கும் நாட்டின் உயர் கல்விக் கொள்கை, மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் இரண்டில் ஒன்றைக் குறித்துத் தன்னும் அக்கறை கொள்ளவில்லை என்பது விந்தையாக இருக்கிறது. மானுடம் சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலைக்குழு உறுப்பினர்களையும், இந்தத் துறைகளின் அந்தஸ்த்தினை உயர்த்தும் நோக்கில் அவர்கள் மேற்கொள்ளும் முக்கியமான பணிகளையும் அங்கீகரிக்கும் அதே வேளையில், சீர்திருத்தச் செயல்முறையின் அடிப்படையான விடயங்களினை உருவாக்கும் சில துறைகள் குறித்து நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது என்பதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

தர உத்தரவாத உலகில் இந்தத் துறைகள் தற்போது எந்தளவுக்குப் புறக்கணிக்கப்படுகின்றன என்பதனை வெளிப்படுத்தும் வகையிலான ஒரு சமீபத்திய அனுபவத்தைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பல்கலைக்கழக மேம்பாட்டுக்காக உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் ஆகப் பிந்தைய திட்டமே எஹெட் (AHEAD) திட்டம் ஆகும். சமீபத்திய அனைத்து உயர் கல்விக் கொள்கை வகுப்புச் செய்ன்முறைகளுக்கும் அடிநாதமாக இருக்கும் சர்ச்சைக்குரிய கருத்தான 'வேலைவாய்ப்புக்கு அமர்த்தக் கூடிய தன்மை' என்பதுவே இந்தத் திட்டத்தினதும் தாரக மந்திரமாகும். “இலங்கைத் தகைமைகள் கட்டமைப்பைப் (எஸ். எல். கியூ. எஃப்) பயன்படுத்தி வேலைவாய்ப்புக்கு ஏற்ற தகைமையினைப் பெறுவதற்கான திறன்களைப் பல்கலைக்கழகக் கல்வியின் கற்பித்தலிலும் கற்றலிலும் எவ்வாறு இணைப்பது" என்பது எஹெட் திட்டத்தின் கீழ் நாங்கள் கலந்து கொண்ட ஒரு பட்டறையின் தலைப்பு. இவ்வாறான பட்டறைகள் பல்கலைக்கழக அமைப்பினுள் பரவலாக இடம்பெறுகின்றன. நீண்ட காலமாக எஸ். எல். கியூ. எஃப் செயன்முறையுடன் ஈடுபட்டுள்ள கல்வியாளர்களினைக் கொண்ட ஒரு கல்வியாளர் குழுவினரால் இந்தப் பட்டறைகள் நடாத்தப்படுகின்றன. அவர்களில் ஒரு சிலர் மாத்திரமே மானுடம் சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களினைச் சேர்ந்தவர்கள்.

பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் அமைப்பு மயமாக்கல் (Systematization) செயல்முறையின் ஒரு பகுதியாக இந்தப் பட்டறை இடம்பெற்றது. எங்கள் பாடநெறிகளுக்கான சுருக்க வரைவினையும், பாடநெறிகளுக்கும், ஒட்டுமொத்தக் கற்கைக்கும் உரிய அனைத்து கற்றல் விளைவுகளையும் (ஐ. எல். ஓ) நாம் எல்லோரும் ஒரே வடிவத்தில், ஒரே சீராக எழுத வேண்டும் என இந்தப் பட்டறையிலே எமக்குச் சொல்லப்பட்டது. பாடத் தலைப்பு மட்டத்தில் எவ்வாறு ஒவ்வொரு பாடத்துக்கும் கற்றல் விளைவுகளினை எழுதுவது என்பது இந்தப் பட்டறையின் நோக்கமாக இருந்தது.

விளைவு அடிப்படையிலான கல்வி (Outcome-based Education) என்றால் என்ன என்பதை விபரித்தற்காகப் பட்டறையின் முதல் 15 நிமிடங்கள் செலவிடப்பட்டன. நாங்கள் செய்ய இருக்கும் செயற்பாடுகளின் மூலமாக எதிர்பார்க்கப்படும் விளைவினை, ஆரம்பத்திலேயே அந்தச் செயற்பாட்டுக்குள் சேர்க்க வேண்டும் என எமக்குச் சொல்லப்பட்டது. நாங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், நாங்கள் எதனைச் "செய்து முடிக்கிறோமோ" அது குறித்து

ஏமாற்றமடைவோம். எஸ். எல். கியூ. எஃப் கட்டமைப்பைப் பயன்படுத்தி நாங்கள் உருவாக்க விரும்பும் இறுதித் "தயாரிப்பு" சமூகத்திற்கு பங்களிக்கக்கூடிய ஒரு "நல்ல குடிமகன்"`என்பதாகும். பங்களிப்பின் தன்மை பற்றி அங்கு கலந்துரையாடப்படவில்லை. ஒரு கட்டடத்தினை அல்லது ஒரு காரினை எப்படி உருவாக்குவது என்பது பற்றிக் கற்பனை செய்யும்படி பின்னர் நாம் கேட்கப்பட்டோம். அத்தகைய தயாரிப்புக்களைச் செய்வதற்குத் திட்டங்கள் மற்றும் ஒரு வரைபடம் தேவை எனச் சொல்லப்பட்டது. ஒரு "மனிதத் தயாரிப்பில்" நாம் ஈடுபடும் போது கூட, உற்பத்தி செயன்முறைக்கான திட்டமிடல் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்; ஒரு "மனிதத் தயாரிப்பு" மிகவும் சிக்கலானது, ஏனென்றால் நாம் அங்கு அந்த மனிதனின் தனித்துவத்தை கவனத்தில் கொள்ள வேண்டும் என எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு நபரும் மற்றையோரில் இருந்து வேறுபட்டவர்; எனவே மனித தயாரிப்புகளினை உருவாக்கும் போது எமக்குக் குறைந்த சுதந்திரமே உள்ளது; இந்த மாதிரியான தயாரிப்பு செயன்முறை எவ்வளவு கடினமாக இருந்தாலும், செயல்முறைக்கு என ஒரு திட்டம் எம்மிடம் இருந்தால், நாங்கள் உருவாக்கும் "தயாரிப்புகளுக்கு" மத்தியில் குறைந்தது சில பரந்த ஒற்றுமைகளைத் தன்னும் எங்களால் உறுதியாக உருவாக்க முடியும் என்றும் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

பொதுவெளியிலே "இயல்பாக" மாறிப் போன விடயங்களைக் கற்றல் நீக்கம் (Unlearn) செய்வது பற்றி மாணவர்களுக்கு கற்பிக்கும் முயற்சியினை மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளின் மூலமாக நாம் மேற்கொண்டு வருகிறோம். மாணவர்களைச் சுட்டுவதற்காக சந்தையின் மொழியையும், விற்பனை செய்யக்கூடிய பொருட்களின் உற்பத்தி செயல்முறையையும் பயன்படுத்துவது, கல்வியிலே நவதாராளமய சந்தைமயமாக்கல் செயன்முறை இடம்பெறுவதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இந்தச் செயன்முறை குறித்து மாணவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என நாம் எச்சரிக்க வேண்டும்.. மாணவர்களைப் பற்றிச் சொல்லும் போது, மாணவர்கள் தமக்கென வரலாறுகளினையும், குறிப்பிட்ட ஆளுமைகளையும் கொண்ட சிக்கலான நபர்களாக இருக்கிறார்கள் என்பதனையும், நாங்கள் உறவுகளை வைத்திருக்கும் நபர்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்பதனையும், அவர்களுடைய திறமைகளையும், திறன்களையும் நாம் வளர்க்கிறோம் என்பதனையும் நாம் குறிப்பிடாது இருப்போமானால், அது மாணவர்களை மனிதநீக்கம் செய்யும் ஒரு செயன்முறையே ஆகும். நவதாராளமய முதலாளித்துவ அமைப்பின் சக்கரத்திலே காணப்படும்

எந்த விதமான வேறுபாடும் இல்லாத பற்களாக மாணவர்கள் பார்க்கப்படுவதனை நாம் ஊக்குவிக்கிறோம் என்பதனையே அத்தகைய மொழிப் பிரயோகம் வெளிக்காட்டுகிறது. இவ்வாறான மனிதநீக்கம் செய்யும் மொழியைப் பயன்படுத்துவது மனிதநீக்கம் செய்யும் விளைவுகளையே ஏற்படுத்துகிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மனிதர்களை ''தயாரிப்புகள்'' என்று குறிப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும் என எங்கள் மாணவர்களுக்குச் சொல்வதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்க வேண்டும். ஏனெனில் அவ்வாறான மொழிப் பிரயோகம் நிஜத் தன்மை மிக்க மனிதர்களைப் பொருட்களாகவும், பண்டங்களாகவும் நாம் நடாத்த முனைவதனையே குறிக்கிறது.

பாடநெறி பற்றிய பரந்துபட்ட முறையிலான சுருக்க வரைபுகளை உருவாக்குவதும், பரந்தளவிலான கற்றல் விளைவுகளை பாடத்திட்டத்தினுள் சேர்ப்பதுவும் எப்போதுமே பிரச்சினைக்குரிய விடயங்கள் அல்ல. கற்பித்தலினைத் திட்டமிடுவதற்கும் வினைத்திறனான கல்விக்கும் இவை உதவுகின்றன. இருப்பினும், இந்த வடிவமைப்புக்களிலே பயன்படுத்தப்படும் மொழி எந்த உணர்திறனும் அற்றதாக இருக்கிறது. இந்த மொழியானது மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளுக்கு உரிய ஒரு பார்வையினைப் பிரதிபலிப்பதாக இல்லை. விளைவு அடிப்படையிலான கல்வி மாணவர்களை வளர்ப்பதற்கான தயார்படுத்தலுக்கு அவசியமான ஒரு செயன்முறையாகவும், மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் ஒன்றாகவும், அவர்களின் திறன்களை வளர்ப்பதற்கு அவசியமான ஒன்றாகவும் விபரிக்கப்பட்டிருக்கலாம். இயங்கு திசை மற்றும் கட்டமைப்பு என்பன படைப்பாற்றலின் உருவாக்கத்துக்கு அவசியமான அடித்தளங்களாகும். இந்த மாதிரியிலான நோக்கங்களினை நிறுத்தி பாடத்திட்ட வடிவமைப்பு இடம்பெறவில்லை என்பதனையே இந்தச் செயன்முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மொழி வெளிப்படுத்துகிறது. பயன்படுத்தப்பட்ட மொழி மானுடம் சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளுக்கான அணுகுமுறையை புறக்கணிப்பதாகவும், எஸ். எல். கியூ. எஃபின் உருவாக்குவதிலும், தர உத்தரவாத செயன்முறையிலும் புதிய சிந்தனை முறை ஒன்று இல்லாது இருப்பதனையும் எடுத்துக்காட்டுகிறது. எஸ். எல். கியூ. எஃபின் அமைப்பு மற்றும் இந்தப் பட்டறையின் இறுதி இலக்கு என்பன பட்டறையின் தலைப்பு குறிப்பிடுவது போல ''வேலைக்கு அமர்த்தக் கூடிய தகுதியினை உருவாக்கும் திறன்களை" *(Employability Skills)* பாடத்திட்டத்தில் உட்சேர்ப்பது மாத்திரமே. "வேலைக்கு அமர்த்தக்

கூடிய தகுதியினை உருவாக்கும் திறன்கள்" என்பதன் தற்போதைய வரைவிலக்கணம் மோசமானதாகவும், மிகவும் குறுகியதாகவும், நீண்ட தூரப் பார்வையற்றதாகவுமே உள்ளது.

மாணவர்களைக் குறிப்பதற்கு பொருள் உற்பத்தியுடன் தொடர்புபட்ட ஓர் உருவகத்தினைப் பயன்படுத்தியமையால் பட்டறையில் பங்கேற்றோரிலே அரைவாசிப் பேர் அங்கு நடாத்தப்பட்ட விளக்கச் செயன்முறைகளினைக் குறித்து முற்றிலுமாகச் சலிப்படைந்தனர். ஏனைய அரைவாசிப் பேர் பட்டறையிலே பயன்படுத்தப்பட்ட கார்ப்பரேட் மொழியைக் கற்க ஆர்வமாக இருந்தமையும், கல்வியில் தற்போது செல்வாக்குச் செலுத்தும் நவதாராளவதாக் கருத்தியலுக்கு அடிபணியும் வகையில் அதனது தேவைப்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுக்க முற்பட்டமையும் கவலை தருவதாக இருந்தது. மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளைச் சேர்ந்த இந்த இளம் கல்வியாளர்களின் இரு தரப்பினரும் தமது துறை சார் பயிற்சியினை அணுகுவதிலே இந்தப் பயற்சிப் பட்டறை தீங்கினை ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்தது.

மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகள் தொடர்பான அறிவு குறித்து, பயிற்சி வழங்கியவருக்கு இருந்த மதிப்பீடு எத்தகையது என்பதனை ஒரு பாடத்தின் கற்றல் விளைவுகளை எவ்வாறு எழுதுவது என்பதை அவர் எங்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு பயன்படுத்திய உதாரணத்தின் மூலமாக அறியக் கூடியதாக இருந்தது. கற்றலின் வெவ்வேறு நிலைகளுடன் ஒத்துப்போகக் கூடிய வினைச்சொற்களை நாம் பயன்படுத்த வேண்டும் எனவும், அந்த வினைச்சொற்களுடன் பொருந்தக்கூடிய பாட உள்ளடக்கத்தையே நாம் கற்பிக்க வேண்டும் எனவும் எமக்கு அறிவுறுத்தப்பட்டது. அதனை எவ்வாறு செய்வது என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டுகாக, மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளிலே எங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும் என, தான் கருதிய ஒரு உதாரணத்தைப் பயிற்சியாளர் பயன்படுத்தினார். அது என்னவெனில், ஆரோக்கியத்தினை நிர்ணயிக்கும் சமூகக் காரணிகள் பற்றியதாகும். இந்த உதாரணம் பொருளியல், சமூகவியல், உளவியல் மற்றும் பிற துறைகளில் உள்ளவர்களுக்குத் தெரிந்திருக்கும் என சொல்லப்பட்டது.

ஆரோக்கியத்தினை நிர்ணயிக்கும் சமூகக் காரணங்களைப் பற்றிக் கற்பிக்கும் போது, இந்தப் பாட விடயம் தொடர்பாக எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகளை (ஐ.எல்.ஓ – *Intended Learning Outcomes*) எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்துக் கொடுக்கப்பட்ட விளக்கம் பின்வருமாறு:

''பட்டியலிடுதல்'' என்ற வினைச்சொல்லுடன் நாம் எமது ஐ. எல். ஓக்களைத் தொடங்க வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது. முதலாவது ஐ.எல்.ஓ ஆக ''ஆரோக்கியத்தினைத் தீர்மானிக்கும் பொதுவான சமூகக் காரணிகளைப் பட்டியலிடுவார்கள்'' என்பதனைக் குறிப்பிடும்படி எமக்குச் சொல்லப்பட்டது. ஏனெனில் "ஒரு குறிப்பிட்ட நபர் எந்த சமூகக் காரணிகளினால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பதனைக் கண்டுபிடிப்பதற்கு முன்பாக, பொதுவான விடயங்கள் குறித்து ஒரு மாணவர் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்'' எனச் சொல்லப்பட்டது.

இரண்டாவது ஐ.எல்.ஓ மேலும் குழப்பமளிப்பதாக இருந்தது. இரண்டாவது ஐ. எல். ஓ ''விளக்கமளித்தல்'' என்ற வினைச்சொல்லுடன் தொடங்க வேண்டும் எனப் பயிற்சியாளர் கூறினார். அவருடைய கருத்தின்படி விளக்கமளித்தல் என்பது "கொஞ்சம் கூடுதலான புலமை சார் செயற்பாடு" என்பதாகும். சுகாதாரத்தினைத் தீர்மானிக்கும் சமூகக் காரணிகள் குறித்து ஒரு மாணவர் எதனை விளங்கப்படுத்த வேண்டும் என்பதனை அவர் விபரித்தார். ''அதிகம் புகைப்பிடிப்பவரை பாதிக்கும் ஆரோக்கியத்தினைத் தீர்மானிக்கும் சமூகக் காரணி என்ன? ஒரு குழுவாகப் புகைபிடிக்கும் போது அங்கு ஒருவர் மீது சமூக அழுத்தம் இருக்கக் கூடும். ஒருவேளை புகைப்பிடிப்பதற்கு ஒருவர் செய்யும் தொழில் கூடக் காரணமாக அமையலாம். ஏனெனில் சில தொழில்களிலே வேலை செய்வோருக்கு சிகரெட்டுகள் இலவசமாகக் கிடைக்கின்றன''. ஒரு சுகாதாரப் பிரச்சினையினைப் பகுப்பாய்வு செய்து, அதன் மூலம் சுகாதாரத்தினைத் தீர்மானிக்கும் சமூகக் காரணிகளை அடையாளம் காண்பதனையும், பின்னர் சமூகக் காரணிகளை மாற்றியமைக்கும் உத்திகளை வடிவமைப்பதனையும் அடுத்த செயன்முறையாகச் செய்யும் படி நாம் மாணவர்களினைக் கேட்க வேண்டும் எனப் பயிற்சியாளர் குறிப்பிட்டார்.

சுகாதாரத்தினைத் தீர்மானிக்கும் சமூகக் காரணிகள் என்ன என்பது பற்றி பயிற்சியாளருக்கு எதுவும் தெரியாது என்பது விரைவில் எங்களுக்குத் தெளிவாகத் தெரிய வந்தது. மக்களினது வாழ்க்கையிலே நோக்கப்படும் சமமற்ற நிலைமைகளுடன் தொடர்புபட்ட பெரும்பாக சமூகக் காரணிகளே சுகாதாரத்தினைத் தீர்மானிக்கின்றன. பயிற்சியாளர் சொன்னது போல, அவற்றினை நாம் ஒரு குறித்த தனிநபரின் சமூக வட்டமாகவோ அல்லது சமூக வாழ்க்கையாகவோ குறுக்க முடியாது.

சுகாதாரத்தினைத் தீர்மானிக்கும் சமூகக் காரணிகள் என்ன என்பது பற்றி கூகுளிலே இருந்து பெறப்பட்ட, உலக சுகாதார ஸ்தாபனத்தினால்

*முன்வைக்கப்பட்ட ஆனால் ஓரளவு விமர்சனத்துக்கும் உள்ளாகிய வரைவிலக்கணம்:*

*ஆரோக்கியத்தினைத் தீர்மானிக்கும் சமூகக் காரணிகள் எனப்படுபவை, மக்கள் பிறக்கின்ற, வளருகின்ற, வேலை செய்கின்ற, வாழுகின்ற, மூப்படைகின்ற எல்லா சமூக நிலைமைகளையும், அந்த நிலைமைகளை நாளாந்த வாழ்க்கையிலே தீர்மானிக்கும் பரந்த சக்திகள் மற்றும் அமைப்புகளையும் உள்ளடக்குகின்றன. பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் அமைப்புகள், அபிவிருத்தி தொடர்பான நிகழ்ச்சி நிரல்கள், சமூக விதிமுறைகள், சமூகக் கொள்கைகள் மற்றும் அரசியல் அமைப்புகள் இவற்றினுள் அடங்கும்.*[14]

*சுகாதாரத்தினைத் தீர்மானிக்கும் சமூகக் காரணிகளை ஒரு எடுத்துக்காட்டாகப் பயிற்சியாளர் பயன்படுத்தத் தேர்ந்தெடுத்த போது, அந்தக் காரணிகள் பற்றி அவர் தனது அறிவினை வலுப்படுத்துவதற்கு எந்த முயற்சியினையும் செய்திருக்கவில்லை.*

*பல்கலைக்கழக அமைப்பு மற்றும் கல்விக் கொள்கை வகுப்புப் போன்றவற்றினைப் பாதிக்கும் ஒரு பாரிய பிரச்சினையினைச் சுட்டிக்காட்ட இந்த சம்பவத்தை நான் தெரிவு செய்தேன். சுகாதாரத்தினைத் தீர்மானிக்கும் சமூகக் காரணிகள் பற்றிய வரைவிலக்கணங்கள் குறித்துப் பட்டறைக்கு முன்னர் பயிற்சியாளர் தேடி அறிய முயற்சி செய்யாமைக்கான அடிப்படை என்னவெனில், மானுடம் சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளைப் போதிப்பதற்கு ஒருவருக்கு எந்த நிபுணத்துவமும் தேவையில்லை என்ற அவரது கருதுகோளேயாகும். அல்லது இந்தத் துறைகள் பற்றிய எல்லா விடயங்களும் எல்லோருக்குமே தெரியும் என்ற அவரின் மனநிலையே. பல்வேறு வகையான சமத்துவமின்மைகளையும் ஓரங்கட்டல்களையும் மாணவர்கள் அடையாளம் காணுவதற்கும், அவற்றின் வரலாறுகளை மாணவர்கள் விளங்கிக்கொள்ளுவதற்கும், அவை எவ்வாறு தொடர்ந்து நீடிக்கின்றன, எத்தகைய சூழ்நிலைகளின் விளைவுகளாக உருவாகுகின்றன மற்றும் அவற்றினால் ஏற்படும் சமத்துவமின்மைகள், மாணவர்களினது சொந்த சூழல்களில் அவை எவ்வாறு நிலவுகின்றன போன்ற விடயங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும், சமத்துவமின்மை மற்றும் ஓரங்கட்டல்களை முறியடிப்பதற்காக ஆக்கபூர்வமான உத்திகளை வடிவமைப்பதற்கும் மாணவர்களை நாம் கற்பித்தலின் மூலம் தயார்படுத்துவதற்கு எடுக்கும் வருடக் கணக்கான முயற்சிகள்*

[14] https://www.who.int/health-topics/social-determinants-of-health#tab=tab_1

யாவும் இந்தப் பயிற்சியாளரின் பார்வையிலே தேவையற்ற விடயங்களாகவே உதாசீனப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர் அனுபவங்களைப் பற்றி அலசும் இந்தக் கட்டுரையின் அடுத்த பகுதியில் குறிப்பிடப்பட்டிருப்பது போல, "கலைத் துறைப் பாடங்களுக்கான குறைந்த மரியாதை" என்பது மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் நாளாந்தம் எதிர்நோக்கும் ஒன்று. எம்மால் வழங்கக் கூடிய நிபுணத்துவத்தினை குறைத்து மதிப்பீடு செய்யும் போக்கு தொடர்ந்தவாறு உள்ளது. கலைப் பட்டம் பெற்றவர்கள் எந்த விதமான பெறுமதியும் அற்றவர்கள் என்ற பொதுவான கருத்து, பல்கலைக்கழக அமைப்பினுள் பரந்த அளவிலே செல்வாக்குச் செலுத்தும் "வேலைக்கு அமர்த்தக் கூடிய தன்மை" பற்றிய ஒரு கொள்கையாகவே தற்போது மாறியுள்ளது. மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளிலே பணியாற்றும் சில கல்வியாளர்கள் கூட இந்தப் பார்வையினைக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான கொள்கைகள் மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளினால் முன்வைக்கப்படும் பார்வைகளின் முக்கியத்துவத்தினைக் குறைத்து மதிப்பிடுவதுடன் இந்தத் துறைகளின் நம்பகத்தன்மையினையும் பலவீனப்படுத்துகின்றன.

இருப்பினும், இங்கு இருக்கும் முரண்நகை என்னவெனில், மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளின் ஊடாக வளர்த்தெடுக்கப்படும் சில திறன்கள் மனித வள முகாமைத்துவம், தனியார் துறையின் சேவை வழங்கும் செயன்முறைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் தொழில்முனைவோர் கல்வியின் *(Entrepreneurship Education)* தாக்கத்தை மதிப்பீடு செய்தல் போன்ற விடயங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வணிகத்துறை குறித்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதும் பல கல்வியாளர்கள், மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளினூடாக வளர்த்தெடுக்கப்பட்ட பண்புசார் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுடன் தொடர்பான திறன்களைத் தமது ஆய்வுகளிலே, குறிப்பான வணிகம் சார் ஆய்வுகளிலே, பயன்படுத்துகின்றனர். என்விவோ *(EnVIvo)* என்ற பண்புசார் ஆராய்ச்சிக்கான மென்பொருளினை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய பயிற்சி ஒன்றினை அண்மையில் முகாமைத்துவப் பீடத்தினைச் சேர்ந்த ஒருவர் கலைப் பீடத்தினருக்கு வழங்கியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. வணிகத் துறையைச் சேர்ந்த பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கு ஆராய்ச்சித் திறன்களைக் கற்பிக்கும் வகையில்

வழங்கப்படும், கட்டணம் அறவிடப்படும் கற்கை நெறிகளினைப் போதிப்பதிலே கலைப் பீடத்தைச் சேர்ந்த எம்மில் பலர் ஈடுபடுகிறோம். எனினும் இந்த முயற்சிகள் யாவும் "சந்தையின்" பயன்பாட்டுக்கு மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளை உபகரணப்படுத்தும் வகையிலேயே அமைகின்றன. இந்தத் துறைகளின் அடிநாதமாக இருக்கும் 'சமூக விமர்சனத்தின்' அடிப்படையில் இந்தப் பாடங்கள் உள்ளீர்க்கப்படுவது தொடர்ந்தும் தடுக்கப்படுகிறது.

மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளின் நம்பகத்தன்மையினைப் பலவீனப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எவ்வாறு பல்கலைக்கழக அமைப்பில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்களுடன் தொடர்புபடுகின்றன என்பதனை இந்தக் கட்டுரையின் அடுத்த பகுதி சில எடுத்துக்காட்டுக்களின் மூலமாக விளக்குகிறது.

**பகுதி 2**

எனது கட்டுரையின் இரண்டாவது பாகத்தில், தற்போது பணியாற்றும் அல்லது சமீபத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் பார்வையிலே மானுடம்சார் கற்கைநெறிகளின் அந்தஸ்து எவ்வாறு இருக்கிறது என்பதனை ஆராய விரும்புகிறேன். பெறப்பட்ட பதில்களைப் பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையிலே, கல்விச் சீர்த்திருத்தங்களிலே மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளில் இருந்து வருகின்ற பார்வைக்கு இடம் இல்லாமல் இருக்கின்றமை, இந்தத் துறைகளுக்கு ஆதரவு வழங்கி அவற்றினை முன்னேற்றி சீர்திருத்தும் முயற்சிகளிலே ஒரு எதிர்மறையான விளைவினையே கொண்டிருக்கிறது என்ற வாதத்தினை நான் இங்கு முன்வைக்கிறேன்.

கட்டுரையின் இந்தப் பகுதி தத்தமது நிறுவனங்களிலே நிரந்தர அடிப்படையிலே பணியாற்றிய பல்கலைக்கழகக் கல்வியாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட பத்து ஆழமான நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த ஆய்வுக்காக நான் நேர்காணல்களை மேற்கொண்ட கல்வியாளர்கள் கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் சப்பிரகமுவ பல்கலைக்கழகம் ஆகியவற்றினைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் மூத்த விரிவுரையாளர் தரத்தை அல்லது அதற்கு மேற்பட்ட தரங்களைச் சேர்ந்தோர். அவர்களில் ஒருவர் பேராசிரியராகவும் இருந்தார்.

*எனது நேர்காணலுக்கான தர்க்கக் கட்டமைப்பு மூன்று விடயங்களைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்டிருந்தது –*

- *மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளுக்காக மாணவர்கள் தயார்படுத்தப்படலும், இந்தக் கற்கைகள் பற்றிய மாணவர்களின் அனுபவங்களும்*
- *கல்வி வழங்குவோரின் ஆராய்ச்சி வெளியீடு*
- *இலங்கையில் மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் வரலாறு மற்றும் அரசியல்*

*விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களுடனான எனது 1- 1.5 மணிநேர உரையாடல்களிலிருந்து பின்வரும் விடயங்களை என்னால் உறுதிப்படுத்த முடிந்தது:*

*1. தற்போதைய கலை மற்றும் மானிடம் சார் கற்கைகளிலே முன்னேற்றமும் சீர்திருத்தங்களும் தேவைப்படுகின்றன.*
*2. "வேலைக்கு அமர்த்தக் கூடிய ஆற்றல்" என்ற கருத்தியலின் அடிப்படையிலே மட்டுமே வடிவமைக்கப்பட்டு, மத்தியமயமாக்கப்பட்ட செயன்முறைகளுக்கூடாக வரும் சீர்திருத்தங்கள் இந்தத் துறைகளின் மீது ஓர் எதிர்மறையான தாக்கத்தையினையே ஏற்படுத்துகின்றன.*
*3. கொழும்பிலே அமைந்திருக்கும் பல்கலைக்கழகங்களினாலும் சில வேளைகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தினாலும் வெளிப்படுத்தப்பட்ட கரிசனைகளுக்கும் சுற்றயலிலே அமைந்த பல்கலைக்கழகங்களான சப்பிரகமுவப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் போன்றவற்றினால் வெளிப்படுத்தப்பட்ட கரிசனைகளுக்கும் இடையே ஒரு தனித்துவமான வேறுபாடு நிலவுகிறது.*
*கட்டுரையின் இந்தப் பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மேற்கூறிய மூன்று முக்கிய வெளிப்படுத்தல்களை ஒட்டியதாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.*

***கலை மற்றும் மானுடம்சார் கற்கைகளின் தற்போதைய நிலை பிரச்சினைக்குரிய ஒன்றாகவும் முன்னேற்றம் தேவைப்படும் ஒன்றாகவும் இருக்கிறது.***

*தற்போதைய பிரச்சினைகள் தொடர்பில் கொழும்பு மற்றும் களனிப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மூத்த கல்வியாளர்களினாலும்,*

தென்கிழக்கு மற்றும் சப்பிரகமுவப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஓரளவு இளைய கல்வியாளர்களினாலும் இரண்டு தனித்துவமான முறைகளிலே வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பல்கலைக்கழகத்தில் ஓர் இடத்தைப் பெறுவதற்காக மாணவர்கள் போட்டித் தேர்வுகளுக்குத் தோற்றுவதற்கான கற்பித்தலினை வழங்கும் எங்கள் கல்வி முறைமையில் உள்ள பிரச்சினைகள் குறித்து தொடர்ந்தும் உரையாடல்கள் இடம்பெறுகின்றன. கலைத்துறையின் கீழ் கல்வியை வழங்குவதனைக் கவனிப்பதன் மீதான நாட்டமும் கலை பட்டதாரிகளின் வேலையின்மையும் என்ற தலைப்பில் எழுதப்பட்ட, இந்தக் கட்டுரையில் முன்னர் மேற்கோள் காட்டப்பட்ட, அறிக்கையின்படி, வறிய மக்கள் மற்றும் வளங்கள் குறைந்த பிராந்தியங்களுக்கும், கலைத்துறைக்குள் நுழையும் மாணவர்களின் எண்ணிக்கையுக்கும் இடையே ஒரு தொடர்பு அவதானிக்கப்படுகிறது.[15] இங்கு முன்வைக்கப்படும் வாதம் என்னவென்றால், வறிய பிராந்தியங்களில் இரண்டாம் நிலைக் கல்வியில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கல்வியை வழங்கும் பாடசாலைகள் போதுமான எண்ணிக்கையில் இல்லை. மேலும், விஞ்ஞானத்தினைக் கற்பிக்கும் பாடசாலைகளுக்குச் செல்லக்கூடிய சில மாணவர்களுக்கு விஞ்ஞானக் கல்வியினைத் தொடர்வதற்கு கூடுதல் உதவி தேவைப்படுகிறது. ஆனால் பல வறிய பெற்றோர் தனியார் கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்படும் வகுப்புக்களிற்கு கட்டணம் செலுத்த முடியாதோராக உள்ளனர். எல்லாத் தரப்பு மாணவர்களும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வியினைப் பெறுவதனை பொருளாதார சமத்துவமின்மை பாதிக்கிறது. விஞ்ஞானக் கல்வியினைப் பெறுவதற்கு வேறு வாய்ப்புகள் இல்லாத, இவ்வாறான மாணவர்களிலே பலர் கலைக் கல்வியைத் தெரிவு செய்கிறார்கள். கலைக் கல்வி "சுலபமானது" எனவும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கல்விக்குத் தேவைப்படும் திறன் நிலைகளும் வளங்களும் கலைக் கல்விக்குத் தேவையில்லை என்றும் அறிக்கையிலே விவரிக்கப்பட்டுள்ளது.

நான் நேர்காணல் செய்த கல்வியாளர்கள் ஓடிட் அறிக்கையின் மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வோடு உடன்பட்டனர். கலைத்துறையில் தாம் சந்திக்கும் மாணவர்கள் பற்றிப் பின்வரும் கருத்துக்களை அவர்கள் முன்வைத்தனர். எமது கல்வி முறையும் அது மாணவர்களை விமர்சன

---

[15] தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை *http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2020/special_20/art/English-Report.pdf* என்ற இணையத்தள முகவரியில் பார்க்கலாம்.

*ரீதியாகவோ அல்லது ஆக்கபூர்வமாகவோ சிந்திப்பதனைத் தடுக்கும் வகையில் வழங்கும் பயிற்சிகளும் மாணவர்கள் தமது திறன்களையும் வாண்மைகளையும் வளர்தெடுப்பதனை எதிர்மறையாக பாதிக்கிறது. பரீட்சை வினாத்தாளுக்கு அவர்கள் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதற்கான சிறந்த உத்திகளைக் கற்றுக்கொள்வதனையே எமது கல்வி முறை ஆதரித்து ஊக்குவிக்கிறது. மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் தனியார் கல்வி நிலையங்களை நாடுகிறார்கள். ஸ்டெம் (STEM) பாடங்களிலே நல்ல பரீட்சைப் பெறுபேறுகளை பெற விரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி வகுப்புகளிலே பயன்படுத்தப்படும் அதே உத்திகளைப் பயன்படுத்தித் தமது கற்பித்தற் செயன்முறைகளை முன்னெடுக்கின்றன. கலைப் பீடங்களுத் தெரிவாகும் மாணவர்கள் அத்துறையிலே மிகவும் குறைவான தயார்படுத்தலுடனுயே தமது பல்கலைக்கழகக் கல்வியினை ஆரம்பிக்கிறார்கள். தனியார் கல்வி நிலையக் கலாச்சாரமும் மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் ஒரு செயன்முறையாக கல்வியினை நோக்குகின்ற போக்கும், உயர்ந்த தரமுடைய மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கல்வியினை மாணவர்கள் பெறும் போது அவர்கள் எதிர்கொள்ளக் கூடிய சவால்களுக்கு மாணவர்களை அரிதாகவே தயார்படுத்துகின்றன. மருத்துவம், பொறியியல் போன்ற ஏனைய துறைகளிலே இறுக்கமானதும், கனதியானதுமான மூன்றாம் நிலைக் கல்வியினை மேற்கொள்ளுவதற்கு மாணவர்களுக்கு வழங்கப்படும் தயார்படுத்தல் போதுமானதாக இருக்கலாம் என ஒரு விரிவுரையாளர் தெரிவித்தார். ஆனால் கலை மற்றும் மானுடம்சார் கற்கைகளினைப் பொறுத்தவரையிலே நிலைமை வேறுபட்டதாக உள்ளது. மாணவர்களுக்குத் தேவைப்படும் விமர்சனப் பாங்கான பார்வை, ஒரு பிரச்சினையினை அவதானித்து அது குறித்த விமர்சனத்தை முன்வைப்பதற்கு வேண்டிய செயலாக்க மற்றும் அறிவாற்றல் திறன்கள் (ப்ளூமின் வகைபிரித்தல் அட்டவணையில் சொல்லப்பட்டிருப்பதன் படி கூட) என்பன கலைப் பிரிவினுள் நுழையும் மாணவர்களுக்கு உயர்ந்த அளவிலே தேவைப்படுகின்றன. தகவல்களை தக்கவைத்திருத்தலினையும் பரீட்சையிலே பதிலளிப்பதனையும் மாத்திரம் திறன்களாக வலியுறுத்தும் தனியார் கல்வி நிலையக் கலாச்சாரத்திலிருந்து வரும் மாணவர்கள், கனதியானதும் இறுக்கமானதுமான மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளிலே ஈடுபடுவதற்குப் போதியளவு தயாரற்றவர்களாகவே உள்ளனர். எனவே, அத்தகைய ஒரு கல்விக்கு அவசியமான சிந்தனை முறைமையினை நோக்கி தம்மை மாற்றுவதற்கு மாணவர்களுக்கு*

*கணிசமான நேரம் தேவைப்படுகிறது. அத்தகைய மாற்றம் அவர்களிலே நடைபெறும் போது அவர்கள் தமது கல்வியினை முடித்துப் பட்டம் பெறுவதற்கான காலம் வந்துவிடுகிறது.*

*மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் காடர்களிலே (Cadre) ஏற்பட்ட மாற்றம் குறித்தும் எவ்வாறு அது கல்வியில் தாக்கம் செலுத்துகிறது என்பது குறித்தும் ஒரு சிரேஸ்ட கல்வியாளர் கருத்துத் தெரிவித்தார். தான் பாடசாலையில் படித்த காலத்தில் இருந்த விமர்சனக் கல்வியை, இன்று கலைப்பீடங்களுக்கு செல்லும் மாணவர்கள் பெறவில்லை என அவர் குறிப்பிட்டார். இலங்கைச் சமூகத்தில் ஏற்பட்ட உருமாற்றமும், ஆசிரியர்கள் மீதான அதன் தாக்கமும் காரணமாக இந்த நிலைமை உருவாகியதாக அவர் கூறினார். இன்று நாட்டின் பெரும்பகுதியினர் இலவசக் கல்வியை பெறுகின்ற நிலைமையிலும், கல்வி பெண்மைப்படுத்தப்பட்டுள்ள சூழலிலும், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்ளைச் சேர்ந்த பெண்களே ஆசிரியர்களாக விளங்குகிறார்கள். அவர்களே அவர்களது குடும்பத்தில் கல்வியில் வெற்றியை அடைந்த முதல் தலைமுறையினராகவும் உள்ளனர். மேலும், அவர்களின் வர்க்க அந்தஸ்து காரணமாகவும், அவர்களுக்கு இருக்கும் குடும்பப் பொறுப்புப் சுமையினாலும், பாடசாலை நேரங்களில் அவர்களின் தேவையான பங்களிப்பினைத் தவிர மேலதிகமாக எதுவும் செய்ய முடியாதுள்ளது. அரசியல் மற்றும் அறிவு ரீதியில் சுறுசுறுப்பாகச் செயற்பட்ட கடந்த காலத்து ஆசிரியர்களுடனும், ஏனையோருடனும் தனிப்பட முறையில் கலந்துரையாடிக் கற்பதற்கு முன்னைய காலத்திலே இருந்த வாய்ப்புக்கள் தற்போது இல்லாது போயிருக்கிறது. மாறாக, தனியார் கல்வி வகுப்புகளில் கலந்து கொண்டு, அங்கு பாடத்திட்டங்கள் யந்திரமயமான முறையிலும், எதுவித கற்பனை வளமற்ற முறையிலும் போதிக்கப்படுவதனையே மாணவர்கள் இன்று கல்வியாக எடுத்துக் கொள்ளுகிறார்கள். எங்கள் கல்விச் செயல்முறையின் தாக்கம், மற்றும் அது நாட்டில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள், இரண்டாம் நிலைக் கல்வியில் அவதானிக்கப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முயற்சிகள் பற்றி எம்மத்தியில் போதுமான ஆராய்ச்சிகள் இல்லை என்பதனைச் சுட்டிக்காட்டுவதற்காகவே நான் இந்த துணுக்குப் பதிவினை இங்கு சேர்த்துக்கொள்ளுகிறேன். இதே போன்ற மற்றொரு துணுக்குப் பதிவு ஓர் ஆங்கில விரிவுரையாளரிடமிருந்து வந்தது. ஆங்கிலம் பேசாத குடும்பங்களில் இருந்து வந்து ஆங்கில இலக்கியக் கற்கையினைத் தற்போது தொடரும் மாணவர்கள், பிரித்தானிய மற்றும் அமெரிக்க*

இலக்கியங்களினை வாசிக்கும் ஆங்கிலமயமாக்கப்பட்ட ஆங்கிலம் பேசும் நடுத்தர வர்க்கக் கலாசாரத்துக்கு அறிமுகமற்றவர்களாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார். அவ்வாறான மாணவர்களிடம் பிரித்தானிய அமெரிக்க இலக்கியங்களினை வாசிப்பதன் அடிப்படையில் உருவாகும் கலாச்சார மூலதனம் இல்லாத நிலைமையினை அவர் சுட்டிக்காட்டினார். இந்த மாணவர்கள் வாசிப்பு ஒரு வழக்கமான நடைமுறையாக இருக்கும் வீடுகளிலிருந்து வந்தவர்கள் அல்லர்.

சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானுடம்சார் துறைகளில் வழங்கப்படும் உயர் கல்வி பற்றி மாணவர்களின் அணுகுமுறை குறித்துத் திறந்த பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த ஒரு விரிவுரையாளர் ஒரு வித்தியாசமான கருத்தினை வெளியிட்டார். இக்கால மாணவர்கள் மூலோபாயத்தினை மையப்படுத்தியும், குறிக்கோள் சார்ந்தும் சிந்திப்பவர்களாக இருப்பதுடன், நேரம் பற்றிய உணர்வு கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதனையும் அவர் குறிப்பிட்டார். ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் தங்கள் பட்டப்படிப்பினை முடிக்க வேண்டும் என்பதிலே அவர்கள் தெளிவாக இருக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் அவர்கள் வேலை செய்யும் மாணவர்களாக இருந்தாலும், முழுநேரப் பாடநெறி ஒன்றினைக் கற்பதனைத் தாமாகவே தெரிவு செய்து கொண்டனர். கல்விக்கான அவர்களின் அணுகுமுறையில், பகுப்பாய்வு மற்றும் பதிலை உருவாக்குவதல் போன்றவற்றிலே அவர்கள் கட்டாயம் ஈடுபட வேண்டும் என்று கோரப்படும் போது, அவர்கள் பெரும்பாலும் கோபமும் விரக்தியும் அடைகின்றனர். ஆனால், கல்வியினை ஒரு கருவி போல பயன்படுத்தி ஒரு மூலோபாயத்தினைக் கற்றுக் கொன்டு அதன் மூலம் சிக்கல்களைத் தீர்க்கும் ஒரு முறையினை அறிவதிலே அவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்களுக்கு எப்போதுமே ஒரு "சரியான" பதில் வழங்கப்பட வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் தாங்களாகவே சிந்திக்க வேண்டும் என்ற கோரிக்கை அவர்களை எரிச்சல் அடைய வைக்கிறது. ஆரம்பத்தில் இருந்தே மாணவர்களின் சிந்தனைத் திறனை மட்டுப்படுத்தும் ஒரு கல்வி அமைப்பின் பகுதியாக அவர்கள் இருப்பதன் காரணமாக வெளிவரும் விரக்தியின் ஒரு வடிவமே இது என்று விரிவுரையாளர் சரியாக அனுமானித்திருக்கிறார். எனினும், தம்மிடம் இருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதனை மாணவர்கள் உணர்ந்தவுடன், அவர்கள் பொதுவாகவே ஆர்வமான முறையில் தமது அணுகுமுறை தமக்கு வழங்கிய சுதந்திரத்தை அனுபவிப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

*பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் மத்தியில் விமர்சன சிந்தனைத் திறன்கள் இல்லாதமைக்குச் சொல்லப்படும் காரணம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரணம் கல்வி முறை முழுவதுடனுமே தொடர்புபட்டது என்றே பேசப்பட்டது. ஆனால் குறிப்பாக அந்தக் காரணம் மானுடம் சார்கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களுக்குச் சேதம் விளைவித்த ஒன்றாக இருந்தது.*

*STEM மற்றும் மானுடம்சார் கற்கைகள், சமூக விஞ்ஞானங்களுக்கு இடையில் உள்ள இடைவெளியை பேணுவதென்பது இரண்டு வகையான மாணவர்களிற்கும் தீங்கு விளைவிக்கும் என கலைப் பீடங்களிற்கு அனுமதி பெற்ற மாணவர்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த இரு தொகுதி மாணவர்களுக்கிடையான விரிசல்களைக் குறைத்து மாணவர்கள் வேறுபட்ட பாடவிதானத்துடனும் ஒருவரோடு ஒருவர் ஊடாடுவதற்குமான வாய்ப்பை வழங்கும் ஒரு செயல்முறைக்கான தேவையொன்று அவதானிக்கப்படுகிறது. கட்டடக்கலை போன்ற மூன்றாம் நிலை படிப்புத் திட்டங்களுக்காக, மாணவர்களை அவர்களின் இரண்டாம் நிலைப் படிப்பின் போதே முன்கூட்டியே தயார்படுத்தும் கற்கைகள் வழங்கப்படுவது அவசியமில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. எந்த ஒரு பாடத்திலாவது சிறப்பாகச் சாதித்த மாணவர் ஒருவர் தனக்கு விரும்பிய எந்த ஒரு துறையினையும் கற்பதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பத்தில் இருந்தே சமூக தொழிநுட்ப பாடமாக கற்பிக்கப்படும் விவசாயக் கற்கைநெறி இவ்வாறான இடைவெளியைக் குறைக்கும் ஒரு முயற்சியாகவே விபரிக்கப்பட்டது. தற்போது முன்மொழியப்படும் நவதாராளவாத மாதிரியின் வரம்புகளைத் தாண்டிய வகையில் நாட்டின் கல்வித்துறையில் கணிசமான மாற்றம் தேவை என்று கருத்து வெளியிடப்பட்டது.*

*தற்போதைய இளங்கலைப் பட்டதாரிகளுக்கு ஆங்கில மொழிப் புலமை இன்றியமையாதது என்ற கருத்துத் தொடர்பிலே நான் பேசிய விரிவுரையாளர்கள் குழுவினர் மத்தியிலே ஒருமித்த கருத்து இருந்தது. இருப்பினும், ஆங்கிலப் புலமையினை உருவாக்குவதற்கான வழிமுறையானது எதிர்பார்த்த முடிவுகளைத் தந்திருக்கவில்லை. ஒரு சில மாணவர்கள் மாத்திரமே ஆங்கில வழிக் கல்விக்காக வழங்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளனர் எனவும், ஆங்கிலத் தேர்ச்சி மாணவர்களின் ஒட்டுமொத்த பெறுபேற்றுப் புள்ளியிடலின் போது கணிப்பீட்டுக்குச் சேர்க்கப்படும் தென்கிழக்குப்*

*பல்கலைக்கழகம் போன்ற இடங்களிலே பல மாணவர்கள் இந்த முறைமை காரணமாக ஏமாற்றமடைந்துள்ளதாகவும், சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த ஒரு விரிவுரையாளர் என்னிடம் கூறினார். அவ்வாறான இடங்களிலே ஆங்கிலத்திலே அவர்களால் சிறப்பான பெறுபேறுகளைப் பெற முடியாவிட்டால், அவர்கள் பெரும்பாலும் வகுப்புச் சித்தியினைப் பெறுவதற்கான வாய்ப்பை இழந்துவிடுவதோடு, அவர்களின் பட்டம் அவர்களின் பாட அறிவைப் பிரதிபலிக்காத ஒன்றாகவும் மாறிவிடுகிறது. குறிப்பாகக் கலைத்துறையில், சிக்கலான கருத்துக்களை மாணவர்களுக்குப் பரீட்சயம் இல்லாத மொழியில் கற்பிக்க முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற வலியுறுத்தலானது, அது மோசமாக நிர்வகிக்கப்படும் ஒரு கட்டமைப்பின் ஊடாக முன்னெடுக்கப்படும் போது, ஆங்கிலம் வெறுமனே ஒரு கருவியாக உள்வாங்கப்படுவதற்கே வழிவகுத்தது. "என்ன சொல்லப்பட்டாலும் பரவாயில்லை அது ஆங்கிலத்தில் சொல்லப்பட்டிருந்தால் சரி" என ஒருவர் கூறினார். இது கலை மற்றும் மானுடம்சார் கற்கைகளில் ஈடுபடும் மாணவர்களுக்குத் தேவைப்படும் சிக்கலான சிந்தனை முறையின் சீரழிவுக்கும் வழிவகுத்தது.*

*விரிவுரையாளர்களின் பயிற்சி மற்றும் பொறுப்புக்கூறல் என்பனவும் மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களை கற்பித்தலுடன் தொடர்பாக எழுப்பப்பட்ட ஏனைய விடயங்களாகும். பல விரிவுரையாளர்கள் பெற்றிருந்த தரம் குறைந்த பயிற்சி மற்றும் தயார்ப்படுத்தல் ஆகியவை மாணவர்களின் திறனைப் பாதிக்கின்றன என்ற எண்ணப்பாடுகள் அவதானிக்கப்படுகின்றன. விசேட பட்டப்படிப்பு மாணவர்களுக்கான ஆய்வுக் கட்டுரை எழுதும் செயல்முறையிலிருந்து பல எடுத்துக்காட்டுக்கள் இது தொடர்பில் வழங்கப்பட்டிருந்தன. இலக்கிய மீளாய்வினை எவ்வாறு எழுதுவது, ஒரு ஆய்வுப் பிரச்சினையை எவ்வாறு உருவாக்குவது போன்ற, ஓர் ஆராய்ச்சித் திட்டத்தை உருவாக்குவதற்கான அடிப்படைத் திறன்கள் பற்றி அனைத்து விரிவுரையாளர்களும் ஒரே மாதிரியான புரிதலைக் கொண்டிருக்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது. இந்த வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் கூட (பொதுவாக இத்தகைய செயல்முறைகளுக்கான துறை ரீதியான வழிகாட்டுதல்களும் உள்ளன), வழிகாட்டுதல்களை விரிவுரையாளர்கள் விளங்கிக் கொள்ளும் முறையானது அவர்களின் சொந்தப் பின்னணி மற்றும் அவர்கள் பெற்ற பயிற்சியைப் பொறுத்துள்ளது. மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களைக் கற்பிக்கும் பெரும்பாலானவர்கள்*

மிகவும் குறுகிய உலகக் கண்ணோட்டத்தைக் கொண்டிருப்பதாகவும், அவர்கள் வெவ்வேறு சிந்தனை முறைகள் மற்றும் வேலை செய்யும் வழிகளை அறிந்திருப்பது முக்கியம் என்றும் ஒரு விரிவுரையாளர் கூறினார். இங்குள்ள விரிவுரையாளர்களை விடுமுறை அடிப்படையில் வெளியிடங்களுக்கு அனுப்புவது மட்டுமன்றி, இலங்கையில் உள்ள விரிவுரையாளர்களுக்குப் பயன் வழங்கக் கூடிய வெளிநாட்டு அறிஞர்களை இங்குள்ள பல்கலைக்கழகத் துறைகள் அழைத்து அவர்களின் சேவைகளைப் பெறுவதற்கும் ஒரு பொறிமுறை இருக்க வேண்டும் என்று அவர் பரிந்துரைத்தார். தரம் குறைந்த கல்விப்பயிற்சி ஒரு பிரச்சினையாக இருக்கும் அதேவேளை, விரிவுரையாளர்கள் பாரியளவிலான கற்பித்தல் சுமையினைச் சுமக்க வேண்டிய கட்டாயமும் இங்கு அவதானிக்கப்படுகிறது. சுற்றயலில் அமைந்திருக்கும் பல்கலைக்கழகங்கள், தமது கற்பித்தல் செயன்முறையினை முன்கொண்டு செல்லுவதற்கு இளநிலைப் பணியாளர்களிலே தங்கியிருப்பதுடன், விரிவுரையாளர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கும் துறைகள் கூட இளங்கலைக் கற்பித்தலுடன், பட்டப்பின் கற்பித்தலையும் மேற்கொண்டு வருகின்றன.

பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் மற்றும் தற்போது பல்கலைக்கழக சமூகத்தின் மீது மேற்கொள்ளப்படும் கட்டுப்படுத்தல் கலாசாரத்திற்கு எதிரான எதிர்ப்பைப் பொறுத்தவரையில், ஆசிரியர்கள் விரிவுரைகளைத் தவிர்ப்பது போன்ற மீறல்களை பற்றிப் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம் என்று சில விரிவுரையாளர்கள் குறிப்பிட்டனர். இவ்வாறான மீறல்கள் வெளியிடங்களில் அல்லது விளிம்புகளில் இருக்கும் வளாகங்களிலே அடிக்கடி தொடர்ந்து நடைபெறுவதாக அவர்கள் குறிப்பிட்டனர். கலைப் பீட இளங்கலைப் பட்டதாரிகளால் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் எழுத்தாக்கம் மற்றும் பகுப்பாய்வுத் தரம் என்பன பற்றிய எதிர்பார்ப்புகள் ஆசிரியர்களின் கல்வித் தரநிலைகள் காரணமாக வேறுபடுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. விரிவுரையாளர்கள் அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட அளவுக்கு கற்பித்தல் மற்றும் நிர்வாகப் பணிகளில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கப்படுவது என்ற பிரச்சினையுடன் ஆசிரியர்களின் பொறுப்புக்கூறல் பிரச்சினையும் உரையாடல்களின் போது முன்வைக்கப்பட்டது.

**கல்வி ஊக்குவிப்பு செயல்முறையினூடாக ஆராய்ச்சி வெளியீட்டை அதிகரித்தல்**

இலங்கையில் உயர்கல்வி சீர்திருத்த செயல்முறைகளின் ஒரு பகுதியாக கல்விசார் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உயர் கல்வித்துறை ஆசிரியர்களின் பதவி உயர்வுச் செயல்முறையானது அவர்களது ஆராய்ச்சி வெளியீட்டுடன் பிணைக்கப்பட்டுள்ளது. அது கல்வியாளர்களின் ஆராய்ச்சி வெளியீடுகள் அதிகரிப்பதற்கு ஊக்குவிப்பினையும் வழங்கியுள்ளது.

நேர்காணல் செய்யப்பட்ட கல்வியாளர்கள் தங்கள் துறைகளில் பணியாற்றும் சக கல்வியாளர்களின் ஆராய்ச்சி வெளியீடு பற்றி நிறையக் கருத்துக்களை வெளியிட்டனர். சமூக விஞ்ஞானத் துறையில் நன்கு மதிக்கப்படும் விரிவுரையாளர் ஒருவர், மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகள் சமீபத்தில் உருவாக்கி வரும் பேராசிரியர்களின் எண்ணிக்கை தொடர்பிலே நிராகரிக்கும் தொனியிலே பேசினார். ஒரு ஆராய்ச்சிப் பிரச்சனையினை எவ்வாறு முன்வைப்பது என்பது பற்றிய தனது சொந்த புரிதலும், தனது சக கல்வியாளர்களின் புரிதலும் வேறுபட்டது என்பதைச் சுட்டிக்காட்டிய ஒரு கல்வியாளர், பலர் ஆராய்ச்சி தொடர்பிலே ஆற்றலோ திறமையோ அற்றவர்களாக இருந்தாலும், அவர்களும் தொடர்ந்து ஆய்வுகளை வெளியிடுவதாகக் கூறினார். பல சந்தர்ப்பங்களில் ஆய்வு ரீதியான எழுத்து வெளியீடுகள் பதவி உயர்வு விண்ணப்பத்திற்கான போதுமான ஆராய்ச்சிப் புள்ளிகளைத் திரட்டும் நோக்கத்திற்காக மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன. நிகழ்நிலையில் அல்லது காகித வடிவில் ஆய்வு பற்றிய விரைவான மதிப்பாய்வு மற்றும் ஆய்வு வெளியீட்டினைப் பல கல்வியாளர்கள் எதிர்பார்க்கின்றனர். இதன் மூலம் விரைவான பதவி உயர்வினைப் பெற முடியும் என அவர்கள் நினைக்கிறார்கள். மேலும் பதவி உயர்வு மதிப்பாய்வு செயல்பாட்டில் எத்தனை ஆய்வுகள் செய்திருக்கிறார்கள் என எண்ணிக்கைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகிறது.[16] மதிப்பாய்வு செயல்முறை, குறியீடு *(Indexed)* செய்யப்பட்ட மற்றும் சக கல்வியாளர்களினால் மதிப்பாய்வு *(Peer-reviewed)* செய்யப்பட்ட இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடுவதற்கு அதிக மதிப்பெண்களை வழங்கும் அதே வேளையில், குறியீடு செய்யப்படாத *(Non-indexed)* வெளியீடுகளுக்கும் கூட அங்கு போதுமான மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. மேலும், இன்று, பணக் கொள்ளையடிக்கும் நோக்கத்தில் *(Predatory)*

[16] *UGC* யின் பதவி உயர்வு பற்றிய சுற்றறிக்கை

பிரசுரிக்கப்படும் ஆய்வுச் சஞ்சிகைகளும் கூட குறியீடு செய்யப்பட்ட சஞ்சிகைகளாகத் தரப்படுத்தப்படுகின்றன. இந்த ஒட்டைகளைப் பயன்படுத்தி முன்னேற முற்படுவோர், ஓர் ஆராய்ச்சி சமூகத்தை உருவாக்குவதிலோ அல்லது தமது ஆராய்ச்சி ஏனையோரினால் மேற்கோள் காட்டப்பட வேண்டும் என்பதிலோ கூட ஆர்வம் குறைவாக அல்லது ஆர்வம் இல்லாதவர்களாக உள்ளனர். இதன் காரணமாக, ஆய்வு வெளியீடுகளின் ஊடாகக் குறிப்பிடத்தக்க கல்வி விவாதங்கள் எதுவும் உருவாகாத நிலமை நோக்கப்படுகிறது. மற்றும் பரந்த சமுதாயத்திற்கு இந்த ஆராய்ச்சியினால் பெரிய அளவு நன்மைகள் எதுவும் கிடைப்பதில்லை. ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆராய்ச்சிச் செய்ற்றிட்டங்களின் ஊடாகக் கேட்கப்படும் கேள்விகள் குறுகியனவாகவும் மேலோட்டமானவையாகவும் இருக்கும் அதேவேளை, கல்வி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றின் தரநிலைகள் மோசமடைந்து செல்வதனையே அவை மேலும் சுட்டிக்காட்டுகின்றன. இதேபோல், பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டத்தில் இந்த ஆராய்ச்சி முயற்சிகளிலே மிகக் குறைவானவையே சேர்க்கப்பட்டுள்ளன. தங்கள் சகாக்கள் பாடப்புத்தகங்களை எழுதி அவற்றினைத் தமது மாணவர்கள் வாங்க வேண்டும் எனவும், பயன்படுத்த வேண்டும் எனவும் நிர்ப்பந்திப்பதாகச் சில விரிவுரையாளர்கள் குறிப்பிட்டனர். இவ்வாறான செயற்பாடுகள் குறித்துப் போதுமான கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாத நிலைமையே அவதானிக்கப்படுகிறது. பதவி உயர்வுச் செயல்முறையை மதிப்பிடுவதிலே ஆய்வு வெளியீடுகளைத் தேவைப்பாடாக வைத்திருக்கும் விடயம் மாத்திரம் நாம் எதிர்பார்க்கும் நல்ல விளைவுகளை உயர்கல்வித் துறையிலே ஏற்படுத்தப் போவதில்லை. வளங்களைக் கணிசமான அளவில் வீணாக்குவதிலும், அறிவு உற்பத்தியில் எந்த விதமான உண்மையான பங்களிப்பினை வழங்காத நிலையினையுமே இது ஏற்படுத்தியுள்ளது.

ஆங்கிலத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுப்பதுவும் ஒரு பிரச்சனை என்று ஒரு விரிவுரையாளர் கூறினார். ஆங்கிலத்தினை ஒரு தேவைப்பாடாக முன்னிறுத்துவது சமூக அறிவியல் கல்வியின் தரத்தை மட்டுமல்ல, கல்வியாளர்களின் ஆராய்ச்சி வெளியீட்டையும் பாதிக்கிறது. ஆங்கிலத்தினை ஒரு கருவியாகவே பயன்படுத்தும் அணுகுமுறை இப்போது அவதானிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான ஒரு தேவையாகவும், திறமையின் குறியீடாகவும் ஆங்கிலம் முன்னிறுத்தப்படுகிறது. ஆனால், ஒருவருக்கு ஆங்கில மொழி ஏன் முக்கியத்துவமானது என்பது பற்றிய போதிய விழிப்புணர்வோடு இந்த

ஆங்கிலத் திணிப்பு செய்யப்படுவதில்லை. "மொழி என்பது ஒருவரின் ஒரு பகுதியாகும், அது கிட்டத்தட்ட ஒரு நபரின் உடலின் பகுதியாகும்" என விரிவுரையாளர் ஒருவர் என்னிடம் கூறினார். ஆங்கிலத் திறமையை அதிகமாக மதிப்பிடுவதும், ஆங்கிலத்தில் திறமையினை உருவாக்க வேண்டியதன் நிர்ப்பந்தத்துக்குமாகக் கொடுக்கப்படும் விலை அதிகம். சிக்கலான கருத்துக்களை மாணவர்களுக்கு அவர்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளாத மொழியில் கற்பிப்பது ஒரு சவாலாகவே உள்ளது. மேலும், அவர்களின் முதல் மொழி அல்லாத ஒரு மொழியில் சிக்கலான சிந்தனைகளை அவர்கள் வெளிப்படுத்துவதும் அவர்களுக்குச் சவாலாகவே உள்ளது. தனது பெரும்பாலான கல்விச் சிந்தனைகளைத் தனது சொந்தத் தெளிவுக்காகத் தான் முதலிலே சிங்களத்தில் எழுதுவதாக இந்தக் கல்வியாளர் கூறினார். அனைத்து விடயங்களிலும், துறைகளிலும் ஒருவரின் ஆங்கிலத் திறனின் அடிப்படையில் அவரின் புலமையினை மதிப்பிடுவது, மேலோட்டமான ஆராய்ச்சி வெளியீடுகளை உருவாக்குவதற்கே வழிவகுக்கிறது. இந்த மாதிரியான ஆய்வு வெளியீடுகள் ஒரு குறிப்பிட்ட பாடப் பகுதியில் நமது அறிவை மேலும் அதிகரிக்கச் செய்யாது என்று மற்றொருவர் கூறினார்.

ஆராய்ச்சி செயல்முறை எப்படி இருக்க வேண்டும் என்பது தொடர்பிலே உண்மையான விளக்கம் இல்லாத நிலைமை அவதானிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. உதாரணமாக, ஆராய்ச்சிக்காக நிதி (சிறிய மானியத் திட்டங்கள்) ஒதுக்கப்படுவதாகச் சொல்லப்படும் அதேவேளை, அந்த நிதியானது ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுவதாக இல்லை. ஆராய்ச்சியுடன் தொடர்புடைய நிருவாகச் செயன்முறைகள் மற்றும் நியாயப்படுத்துதல் செயல்முறைகள் ஆராய்ச்சி செயல்முறைக்கு ஏற்ற முறையில் வடிவமைக்கப்படுவதில்லை. மேலும், ஆராய்ச்சி செயல்முறைக்கும், ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுவதற்கும், அவற்றினைப் பற்றி சிந்திப்பதற்கும் உரிய நேரம் தேவை என்பது பலராலும் உணரப்படுவதில்லை. ஆராய்ச்சி பற்றி எழுதுவது ஆராய்ச்சி வெளியீட்டின் ஒரு பகுதி என்பதனைப் பலரும் விளங்கிக்கொள்ளுவதில்லை.

**வேலைக்கமர்த்தக் கூடிய தகைமை பற்றிய கருத்தாடல்கள்**

ஆய்வுகள் மூலம் ஏற்கனவே உறுதி செய்யப்பட்டது போல, சமூக விஞ்ஞானங்களும், மானுடம்சார் துறைகளும் சுயமொழிக் கற்றலின் மிகவும் கூடிய விரிவாக்கத்துக்கான துறைகளாக விளங்குகின்றன. சிங்களத்துக்கு மொழி பெயர்க்கப்பட்ட கற்றல் விடயங்கள்

பற்றாக்குறையாகக் காணப்படுவதனால், விரிவுரையாளர் வழங்கும் பாட, விடய குறிப்புகளை மட்டும் வைத்தே இந்தத் துறைகளின் மாணவர்கள் தமது அறிவைப் பெற்றுக் கொள்ளுகின்றனர் என்பது ஆய்வுகள் மூலம் ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளது. சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானுடம்சார் கற்கைகள் தொடர்பிலே முன்னைய தலைமுறையினர் கொண்டிருந்த அறிவுடன் ஒப்பிடுகையில், இப்போது மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு குறைந்து செல்லுதல், ஒரு குறித்த காலமாக இந்தத் துறைகள் ஒடுங்கிச் செல்லுவதனையே காட்டுகிறது. பல்கலைக்கழக மட்டத்திலே சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலத்துக்குக் கற்கைகள் மாற வேண்டிய நிலை ஏற்பட்டதனால், கணிசமான அளவு அறிவாளிகளின் (மூளைசாலிகளின்) வெளியேற்றம் இடம்பெற்றதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். பழைய காலத்தில் இருந்தது போன்ற அதிகாரப்படி முறையிலுள்ள, கடும் “ஆசிரிய மாணவ” முறைமை பல்கலைக்கழகங்களிலே, குறிப்பாகக் கலைப்பிரிவிலே, இப்போதும் காணப்படுகின்றமையினை ஏற்கனவே வெளியாகிய ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. பல்கலைக்கழகங்களிலே உள்ள துறையினர், தங்கள் மாணவர்களையே தமது பல்கலைக்கழகங்களிலே, தமது துறைகளிலே விரிவுரையாளர்களாக வேலைக்கு அமர்த்துகின்றனர். ஒக்ஸ்போட், கேம்பிரிஜ் பல்கலைக்கழகங்களில் இன்னமும் இருப்பது போன்ற, இது போன்ற ஆட்சேர்ப்பு முறைமை ஏனைய இடங்களிலே அருவருப்பான ஒரு விடயமாகவே பார்க்கப்படுகிறது. அமெரிக்கப் பல்கலைக்கழகங்களிலே இது நடைபெறுவதே இல்லை. கல்வியில் திறமையினைக் காண்பிக்காது, கல்வியைப் புறக்கணிப்பதிலும், அரசியல் கட்சிகளுடன் சார்பான மாணவ அரசியலை வளர்த்தலிலும், மிலேச்சத்தனமான மரணத்தை ஏற்படுத்தக்கூடிய பகிடிவதையினை நிகழ்த்துவதிலும், கடினமான இறுக்கமான, காலாவதியாகிப் போன கணிப்பீட்டுச் செயல்முறைகளைப் பின்பற்றுவதிலும், முறையற்ற அதிகாரப்படி முறைகளுடன் செயற்படுவதிலும், எந்த விதமான கண்டுபிடிப்புக்களும் அல்லது முன்னேற்றமும் அற்ற செயற்பாடுகளிலே தம்மை வீணடிப்பதிலும் ஈடுபடும் இடங்களாகவே இலங்கை பல்கலைக்கழகங்களின் கலைப்பீடங்கள் ஒரு காலப்பகுதியிலே நோக்கப்பட்டன. எம்மிடமிருந்து கற்று வெளியேறும் மாணவர்கள் தாம் சும்மா இருக்க தமக்கு எல்லாமே வழங்கப்பட வேண்டும் என நினைப்பவர்களாகவும், எந்த விதமான நெகிழ்ச்சித் தன்மையுமற்றவர்களாகவும், பிரச்சினைகளை உருவாக்குகின்றவர்களா

-கவும், வேலைத்தளங்களிலே எதிர்பார்க்கப்படும் திறன்களை அதிகம் கொண்டிராதவர்களாகவும் கருதப்பட்டனர்.

இந்தக் காலப்பகுதியில் கலைப் பீடங்களினதும், மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களினதும் மதிப்பு பாரிய தாக்கத்துக்கு உள்ளாகியது. இந்தத் தாக்கத்தின் விளைவுகள் தொடர்ந்தவாறு உள்ளதுடன், உயர்கல்வித் துறை முழுவதும் அவை தொடர்ந்தும் உணரப்படுகின்றன. இந்தத் துறைகளிலே பயிற்றப்பட்ட ஆசிரியர்களினை மதிக்கும் போக்குக் குறைவாக இருப்பதற்கு இதுவே காரணமாக இருக்கக் கூடும். இதன் காரணமாகவே இந்தத் துறைகளில் இருந்து வெளிப்படும் அறிவினையும் குறைத்து மதிப்பிடும் போக்கு அவதானிக்கப்படுகிறது. இந்தத் துறைகளின் கற்பித்தலில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பினும், சவால்களுக்கு மத்தியில் இந்தத் துறைகளினைச் சேர்ந்தோர் நன்கு செயற்பட்டிருப்பினும், இந்தத் துறைகளினைச் சேர்ந்த கற்கை நெறிகள் தரம் குறைந்தவையாகவே கருதப்பட்டன. இந்தத் துறைகளில் மேற்கொள்ளப்படும் சாதனைகளை அங்கீகரித்து அவற்றுக்குரிய சன்மானங்களை வழங்கும் எந்தப் பொறிமுறையும் இல்லாது இருக்கிறது. இந்தத் துறைகளைச் சேர்ந்த பல சிரேஸ்ட கல்வியியலாளர்கள் ஆங்கிலத்திலே எழுதப்பட்ட விடயங்களை வாசிக்கக் கூடியவர்களாக இருந்தாலும், அவர்களால் ஆங்கில மொழி மூலமாகச் சிறப்பாக செயற்பட முடியாதுள்ளதற்கு காரணமாக இருப்பது இந்த நாட்டின் பாடப் பிரிவுகளும் துறைகளும் வரலாற்று ரீதியாக வளர்ச்சி பெற்ற முறையே ஆகும். பல்கலைக்கழக நிருவாகக் கட்டமைப்பு ஆங்கிலத்திலேயே இயங்கும் ஒரு சூழலிலே, தமது தர்க்கங்களை விறுவிறுப்பான முறையிலே ஆங்கிலத்திலே அவர்களால் முன்வைக்க முடியாதமை அவர்களின் ஆய்வுகள் கூடிய எண்ணிக்கையானோரினைச்சென்றடைவதனை மட்டுப்படுத்தியுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அவர்களினால் ஆங்கிலத்தில் தம் கருத்துக்களை வெளிப்படுத்தக் கூடியதாக இருப்பது என்பது, அவர்களது இயலுமையும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாக இருப்பதாக விளங்கிக்கொள்ளப்படக் கூடாது. எனினும் கலைப்பீடங்கள் மதிப்புக் குறைந்தவை என்ற நோக்கு நிலையில் இருந்து அங்கு பணியாற்றுவோரும் மதிப்பிடப்படுகிறார்கள். காலனித்துவ மனநிலையுடன் ஆங்கில மொழியின் மீது நாம் காட்டும் நாட்டம், ஒருவருக்கு ஆங்கிலம் தெரிந்திராவிட்டால் அவருக்கு எந்த ஆற்றலும் இல்லை என்ற முடிவுக்கு வருவதற்கு எம்மைத் தள்ளுகிறது. குறிப்பாகத் தர உறுதிப்பாட்டு செயன்முறையின் போது, ஸ்டெம் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் ஆங்கில மொழி இயலுமை அந்தப்

*பாடங்களின் கல்விக் கொள்கையைத் தீர்மானிப்பதில் முன்னிடம் வகிக்கிறது. அந்த அடிப்படையில் இருந்தே நாட்டின் ஒட்டுமொத்த உயர் கல்விக் கொள்கையும் இன்று வகுக்கப்படுகிறது என்பதனைச் சுட்டிக்காட்ட வேண்டும்.*

*வினைத்திறனற்ற ஆசிரியர்கள், நிர்வாகத்தில் நிலவும் பழமைவாதம், பல்வேறு நிறுவனங்களினால் பேணப்படும் அதிகார உறவுகள் போன்ற கட்டமைப்புக்களில் அவதானிக்கப்படும் அடிப்படையான தோல்விகள் தற்போது சவாலுக்கு உள்ளாக்கப்படுகின் -றன. மிகவும் தேவையான மறுசீரமைப்புகள் எனப் பல விடயங்கள் தற்போது கலைப்பீடங்களின் மீது திணிக்கப்படுகின்றன. உலக வங்கியின் நிதிப்பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்க -ளின் வாயிலாக முன்னெடுக்கப்படும் இந்த மறுசீரமைப்பு முயற்சிகளின் மூலமாகப் பல்வேறு கட்டமைப்புக்களும், செயன்முறைகளும், சட்டகங்களும் கலைப்பீடங்களின் மீது சுமையாக்கப்படுகின்றமையினை இன்று நாம் காணக்கூடியதாக உள்ளது. இந்த கட்டமைப்புக்களும் செயன்முறைகளும் தோல்வியடைந்து கொண்டிருக்கும் எமது பல்கலைக்கழகக் கட்டமைப்பினை ஒரு நவதாராளவாதப் பல்கலைக்கழகமாக வெளியில் தெரியக் கூடிய வகையில் மாற்றும் வகையில் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான மாற்றங்களை முன்னெடுப்பதன் மூலம் பல்கலைக்கழகங்களைத் தரவரிசைப்படுத்தும் முறைமைக்குள் எம்மை நாமே உட்படுத்துவதுடன், உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் தரப்படுத்தல் முயற்சிகளுக்கு ஏற்ப எம்மை மீளுருவாக்கவும் நாம் முற்படுகிறோம். இந்த நவதாராளத் தன்மையான பல்கலைக்கழகம் தோல்வியடைந்த ஒரு மாதிரி எனவே பல வருடங்களாகப் பொதுவாக எல்லோரினாலும் கருதப்படுகிறது. பலராலும் விமர்சிக்கப்படும் இந்த முறைமையினை மீளுருவாக்குவதிலே நாம் இப்போது ஈடுபடுகிறோம்.*

*மறுசீரமைப்பின் இலக்குகள் சமூக விஞ்ஞான மற்றும் மானுடம்சார் கற்கைகளினைப் பாதுகாப்பது என வெளியிலே சொல்லப்படுகிறது. ஆனால் இந்த சீர்திருத்தங்கள் உண்மையில் எதனைச் செய்கின்றன என்றால் இந்தப் பாடங்களை அவற்றின் அடையாளமே தெரியாத வகையில் மாற்றியமைத்து வருகின்றன. தொழிலுக்கு அமர்த்தக் கூடிய ஆற்றல் பற்றிய கருத்தாடல்கள் மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் ஆன்மாவினையே நசுக்கும் வகையில் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தத் துறைகள்*

இருப்பதன் நோக்கமே இவற்றினைக் கற்பதன் மூலமாகத் தொழில்களைப் பெறுவதே என்ற அளவுக்கு இந்தத் துறைகளினைக் குறுக்கும் செயன்முறைகளையே நாம் இப்போது காண்கிறோம். சிந்தனைகளின் உருவாக்கத்துக்கான வரலாற்றினை விளங்கிக்கொள்ளுதல், நாங்கள் இன்று ஈடுபட்டுக்கொண்டிருக்கும் செயன்முறைகளின் தத்துவார்த்த அடிப்படைகளை விளங்கிக்கொள்ளுதல், அந்தச் செயன்முறைகளைத் தேவை ஏற்படின் எப்படி மாற்றியமைத்தல் போன்ற விடயங்களுக்கு மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களினால் ஆற்றப்படக் கூடிய பங்களிப்பு இன்று குறைத்து மதிப்பிடப்படுவதனை நாம் காண்கிறோம்.

மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானங்களின் அடிப்படைகள் தொடர்பிலே போதுமான புரிதல் அற்ற வகையில் முன்னெடுக்கப்படும் சீர்திருத்தங்களினைக் கையாளுவதற்கு ஒவ்வொரு கற்கைநெறியும் எவ்வாறு முயற்சி செய்கிறது என்பது பற்றி நேர்காணலிலே பேசிய எல்லா விரிவுரையாளர்களும் தமது கருத்துக்களை வெளியிட்டனர். இந்தத் தர உத்தரவாதச் செயன்முறையினைத் தனது துறைக்கும், தனது பாடதுக்கும் எது தேவையோ அதனைச் செய்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகக் கையாண்டதாக ஒரு மூத்த கல்வியாளர் குறிப்பிட்டார். வேலைசெய்வதற்கான தகைமை தொடர்பாக நடாத்தப்படும் கருத்தரங்குகளிலே தான் கலந்துகொள்ளுவதில்லை என்றும், கல்வியாளர்களுக்கு வழங்கப்படும் வேறுபட்ட சட்டகங்களைத் தான் தர்மை வகிக்கும் கற்கைநெறியின் நன்மைக்குப் பொருத்தமான வகையில் தான் பயன்படுத்துவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இந்தச் செயன்முறைகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது தொடர்பான அறிவுறுத்தல்களை முன்னெடுப்பதிலே ஒவ்வொரு துறைகளுக்குள்ளும் சுதந்திரம் இருப்பதாக அவர் கூறினார். எனினும் இந்த விரிவுரையாளர் பயன்படுத்தும் தந்திரோபாயச் செயன்முறைகளினால், சீர்திருத்தம் என்ற பெயரில் மானுடம்சார் கற்கைகளையும், சமூக விஞ்ஞானங்களையும் சீரழிக்கும் செயன்முறைகளைத் தடுக்க முடியாது என மற்றொரு கல்வியாளர் கருத்து வெளியிட்டார். தர உத்தரவாதச் செயன்முறை பற்றிப் பல்கலைக்கழகங்களின் நிருவாகச் செயன்முறைகளின் போது எந்த உரையாடல்களும் இடம்பெறுவதில்லை எனவும், இந்த விடயம் குறித்துப் பல்கலைக்கழகங்கள் தமது அங்கீகாரத்தினை வழங்கும் நடைமுறைகள் எதுவும் இல்லாதிருப்பதாகவும், இந்தச் செயன்முறை மேலிருந்து கீழ் நோக்கித் திணிக்கப்படும் ஒரு செயன்முறையாக

அமைவதாகவும் இரண்டாவது கல்வியாளர் வருத்தத்துடன் குறிப்பிட்டார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் திணிக்கப்படும் இந்தச் சீர்திருத்தங்கள் பற்றி பீடச் சபைகளிலும் செனட்டிலும் உரையாடப்படுவதில்லை. இவ்வாறு தொடரும் செயன்முறைகளுக்கு எதிர்ப்பினை வெளியிடக் கூடிய இடமோ, பொறிமுறையோ தற்போது இல்லாதிருக்கும் நிலைமையும் அவதானிக்கப்படுகிறது.

தொழிலுக்கு அமர்த்தக் கூடிய ஆற்றல் பற்றிய சட்டகங்களினை நாம் தந்திரோபாயமாக எமக்கு ஏற்ற வகையில் மாற்றிக் கையாள முடியும் என்ற கருத்துப் பற்றித் தமக்குப் பெரிய அளவிலே நம்பிக்கை இல்லை என ஏனையவர்கள் குறிப்பிட்டனர். ஒரு நற்பிரசையினை உருவாக்குவதில் இருந்து விடுபட்டு, கல்வியின் இலக்கானது இன்று தொழிற்சந்தைக்குத் தொழிலாளர்களை அனுப்பி வைப்பதனை நோக்கியதாகி விட்டதாக ஒருவர் கூறினார். எனினும் உலகம் மாறிக் கொண்டிருப்பதனால், இதனைத் தவிர்க்க முடியாதென்று அந்த விரிவுரையாளர் மேலும் கூறினார். இந்த மாற்றத்தினை நாம் தடுக்க முற்படுவோமானால், அது ஒரு பொறுப்பற்ற செயற்பாடாகவே இருக்கும் எனவும் அவர் கூறினார். இந்த நிலைப்பாடு எல்லோர் மத்தியிலும் அவதானிக்கப்பட்ட ஒரு பொதுவான நிலைப்பாடாக இருக்கவில்லை. ஆனாலும் சமூக விஞ்ஞான விரிவுரையாளர் ஒருவரிடமிருந்து வரும் ஒரு நிலைப்பாடு என்ற வகையில் இந்த நிலைப்பாடு கவலைக்குரிய ஒரு விடயமாகவே இருந்தது. வேலைக்கு அமர்த்தக் கூடிய தகைமை பற்றிய கருத்தாடல்கள் எமது கல்வித் துறையின் மீது எவ்வளவு தீவிரமான தாக்கத்தினை ஏற்படுத்தி இருக்கின்றன என்பதற்கு இந்த நிலைப்பாடு ஒரு சான்றாக அமைகின்றது.

வெளியில்/சுற்றயலில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றிலே பணியாற்றும் மற்றுமொரு விரிவுரையாளர் கருத்து வெளியிடும் போது, தான் பணியாற்றும் பல்கலைக்கழகம் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட சுற்றயற் சூழலிலே இருப்பதனால், உத்தியோகபூர்வ அறிவித்தல்களும் வழிகாட்டல்களும் மேலிடத்தில் இருந்து வரும்போது அவற்றைத் தவிர்ப்பது, தமது பல்கலைக்கழகத்தினைப் பொறுத்தவரை மிகவும் கடினமானதாக இருப்பதாகக் குறிப்பிட்டார். இவ்வாறான வழிகாட்டல்களுக்கு இணங்க மாற்றங்களைச் செய்வது தாம் கற்பிக்கும் கற்கைநெறிகளுக்குப் பெரும் தீங்கை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அவருடைய பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்

சமூக விஞ்ஞானக் கற்கைநெறி பற்றிக் கலந்துரையாடுகையில், சமயங்களின் சமூகவியல் என்ற பாடத்தினைக் கற்பிப்பது பயனற்றது எனவும், அதனால் மாணவர்களின் வேலைவாய்ப்புப் பெறும் தகைமைக்கு எந்தப் பங்களிப்பினையும் வழங்க முடியாது என்றும் தனது துறைத் தலைவரே குறிப்பிட்டதாகவும் இந்த விரிவுரையாளர் குறிப்பிட்டார். சமயம் போன்ற இலங்கையின் சமூக நிலைமைகளில் தாக்கம் செலுத்தும் விடயங்கள் குறித்து விமர்சனபூர்வமாக விளங்கிக்கொள்ளுவதற்கு வேண்டிய அறிவுசார் மொழியினை சமூக விஞ்ஞானங்களே வழங்குகின்றன. சமூக விஞ்ஞானத்துறைகள் தங்களினால் வழங்கப்படும் கற்கைநெறிகளினைத் தாமே தேவையற்ற முறையில் விமர்சிக்கும் துர்ப்பாக்கிய நிலையினை, வேலைக்கு அமர்த்தக் கூடிய தகைமை பற்றிய கலந்துரையாடல்கள் ஏற்படுத்தியிருக்கின்றன என்பது நாம் அபாயகரமான ஒரு கட்டத்திலே இருக்கிறோம் என்பதனையே காட்டுகிறது. இது சுற்றயலிலே இருக்கும் பல்கலைக்கழகங்களிலே சமூக விஞ்ஞானக் கற்கைநெறிகள் பிரச்சினைக்குரிய முறையிலே முன்னெடுக்கப்படுகின்றன என்பதனையும் வெளிக்காட்டுகின்றது. கொழும்பில் இருந்து மேற்கொள்ளப்படும் வழிகாட்டல்களைத் தாம் பின்பற்ற வேண்டும் என்ற அவாவினால், இந்தப் பல்கலைக்கழகங்கள் சமூகவேலை, தொடர்பாடல், உளவளப்படுத்தல் போன்ற 'செயன்முறை' சார் கற்கைகளைப் போதிக்க ஆரம்பித்திருக்கின்றன. எனினும், இந்தக் கற்கைநெறிகள் செயன்முறை விடயங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்க முற்படுவதனால், அவற்றினால் இந்தப் பாடங்கள் தொடர்பான ஓர் அடிப்படை அறிமுக அறிவினை மாத்திரமே வழங்கக் கூடியதாக உள்ளது. இந்தச் 'செய்முறைகளுக்கான' கோட்பாட்டு அடித்தளங்கள் குறித்தோ, அவற்றின் தத்துவார்த்த அடித்தளங்கள் குறித்தோ விளக்கங்களை உருவாக்க வேண்டும் என்பதில் இந்தக் கற்கைநெறிகள் ஆர்வம் காட்டுவதில்லை. இந்த வகையான 'செயன்முறை' சார் கற்கைநெறிகளைப் பயிலும் மாணவர்களுக்கு அடுத்த கட்ட கல்விச் செயன்முறைகளிலே ஈடுபடுவது கடினமாக இருக்கும் என அந்த விரிவுரையாளர் கவலை வெளியிட்டார். அவர் குறிப்பிட்டது போல, "சமூகவேலை என்பது உலகில் உள்ள எல்லா விடயங்களுக்குமான பதிலாகவோ தீர்வாகவோ அமையாது".

பிராந்திய பல்கலைக்கழகம் ஒன்றில் அவதானிக்கப்படும் மற்றொரு சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், மாணவர்களும் விரிவுரையாளர்களும் மானுடம்சார் கற்கைகளை விட சமூக விஞ்ஞானக் கற்கைகளுக்கே அதிக வேலை வாய்ப்புகள் இருப்பதாகக்

கருதி சமூக விஞ்ஞானங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வரும் போக்கு ஆகும். சமூக விஞ்ஞானக் கற்கைநெறிகளுக்கே அதிக கேள்வி இருப்பதாகக் கருதப்படுகிறது. எனவே இந்த இரண்டு தொகுதித் துறைகளையும் வேறுபடுத்தி, கேள்வியின் அளவினை உச்சமாக்குவது குறித்த சாத்தியக்கூறுகள் பற்றி கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இந்த அடிப்படையில் பாடங்களுக்கான கேள்வி என்பதனை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானுடம்சார் கற்கைகளுக்காகத் தனித் தனிப் பீடங்களை அமைக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டது. சமூக விஞ்ஞானக் கல்வியின் சமூக நன்மை மாத்திரமா அல்லது மானுடம்சார் கற்கைகளின் சமூக நன்மை மாத்திரமா இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்ட போது கருத்திலே எடுக்கப்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

வேலைக்கு அமர்த்தக் கூடிய தகைமை தொடர்பான கருத்தாடல்களிலே முன்னிறுத்தப்படும் முக்கிய அம்சமான ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பான பிரச்சினையும் இங்கு முழுமையாக விவாதிக்கப்பட்டது. ஆங்கில மொழி கற்பித்தல் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் ஒரே மாதிரியான முறையிலே முன்னெடுக்கப்படவில்லை. அது ஒரு மேலோட்டமான முறையிலே மேற்கொள்ளப்பட்டது எனவும் அதனால் எதிர்பார்க்கப்பட விளைவுகளை உருவாக்க முடியவில்லை என்ற கவலை வெளியிடப்பட்டது. சுற்றயலில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில், பட்டப்படிப்பு நிறைவில் மாணவர்களின் வகுப்புத் தரவரிசை கணிப்பிடப்பட்ட போது, மாணவர்கள் ஆங்கிலத்திலே பெற்ற தரங்களும் கணக்கிலே எடுக்கப்பட்டமை தொடர்பாக அந்தப் பல்கலைக்கழகத்தினுள்ளே பெரும் மனக்கசப்பு அவதானிக்கப்பட்டது. மாணவர்கள் மிகவும் பின்தங்கிய பின்னணியைச் சேர்ந்தவர்களாகவும், பின்தங்கிய மாணவர்களுக்கு கூடுதல் உதவி அல்லது ஆதரவு எதுவும் வழங்கப்படாத ஒரு சூழலிலே, இந்த நடைமுறை பாதிப்பினை ஏற்படுத்தும் ஒன்றாகவே கருதப்பட்டது. நேர்காணல் செய்யப்பட்ட விரிவுரையாளரின் கூற்றுப்படி, பட்டப்படிப்பின் போதான ஆங்கிலக் கற்கைநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யய இயலாமையால், மாணவர்கள் முதல் வகுப்புச் சித்தியினைப் பெற முடியாது போயிற்று. கட்டாய ஆங்கிலக் கற்கைநெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையினை முன்வைத்தமையின் நோக்கம் பாராட்டத்தக்க ஒன்றாக இருந்தபோதிலும், அதனால் மாணவர்களுக்கு நன்மை கிடைக்கவில்லை. உண்மையினைச் சொல்லின், அது

மாணவர்களின் எதிர்கால வாய்ப்புகளைச் சேதப்படுத்திய ஒன்றாகவே இருந்தது.

வேலைக்கு அமர்த்தக் கூடிய தகைமை பற்றிய கருத்தாடல்களினைப் பெருநகரப் பல்கலைக்கழகங்களிலே கற்பிக்கும் விரிவுரையாளர்கள் தமக்குரிய பாணியிலே கையாள்கிறார்கள் என்பதனை இந்த நேர்காணல்கள் வெளிப்படுத்தின. தமக்கு வழங்கப்படும் சட்டகங்களையும், அறிவுறுத்தல்களையும் தங்கள் சொந்தத் துறைகளினதும் கற்கைநெறிகளினதும் அத்தியாவசிய கூறுகளினை மேம்படுத்துவதற்கு ஏற்ற வகையில் அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதனையும் அறியக் கூடியதாக இருந்தது.

**இடத்தின் விசேட தன்மைகள்**

பிராந்தியங்களிலே இருக்கும் "சுற்றயற்" பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில் அவற்றின் இருப்பிடங்களின் சிறப்பியல்புகள் மற்றும் அரசியல், வரலாறு போன்றன அந்தப் பல்கலைக்கழகங்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படுவதில் குறிப்பிட்டளவு தாக்கத்தை செலுத்துகின்றன. வளங்கள் மற்றும் நிபுணத்துவம் போன்றவற்றினைப் பெறுவதிலே இந்தப் பல்கலைக்கழகங்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குவதனால் இங்கு பயிலும் மாணவர்களின் நிபுணத்துவத்திலும் போதாமைகள் அவதானிக்கப்படுகின்றன. அவர்களுக்கான தயார்படுத்தலிலும் குறைபாடுகள் இருக்கின்றன. கண்டி மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் இருக்கும் பல்கலைக்கழகங்களில் இருக்கும் வளங்களை போல, சப்ரகமுவ, யாழ்ப்பாணம், மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருக்கும் பல்கலைக்கழகங்களின் வளங்கள் காணப்படுவதில்லை. இவ்வாறான சுற்றயற் பல்கலைக்கழகங்களிலே கற்கும் மாணவர்கள், ஆங்கிலம் தொடர்பாகவோ அல்லது ஏனைய வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாகவோ நகர்ப்புற பல்கலைக்கழகங்களில் இருப்பது போன்ற வாய்ப்புகளை அணுக முடியாமல் உள்ளனர்.

சில சந்தர்ப்பங்களில் சில இடங்களின் ஏனைய இடங்களில் இருந்து விலத்தப்பட்ட, அகமயமான தன்மை (இது சிலவேளைகளில் செயற்கையாகவும், வேண்டுமென்றே உருவாக்கப்படுகிறது) சில கற்கைநெறிகளைப் பாதிக்கிறது. ஒரே இனத்தவர் வாழும், ஒரு மொழியினைப் பேசும், மற்றும் ஓரளவு தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் அமைந்துள்ள தென்கிழக்கு பல்கலைக்கழகமானது, அதனுடைய எல்லைக்கு வெளியில் இருந்து வரும் தகுதிவாய்ந்த

கல்வியாளர்களைத் தக்கவைத்துக்கொள்வதில் சிக்கல்களைக் எதிர்கொள்ளுகிறது என்று கூறப்படுகின்றது. மேலும் அந்தப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள், நிர்வாக ஊழியர்கள் மற்றும் துணைவேந்தர் கூட ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்ற விடயம் கரிசனைப்பட வேண்டிய ஒன்றாகச் சுட்டிக்காட்டப்பட்டது. தமது சொந்த மாணவர்களையே ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் பேணப்படும் அதிகாரப் படிநிலைகள் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலே அங்கு கற்பிக்கும் அனைவரும் அயலவர்களாக இருக்கும் அளவுக்கு மேலும் மோசமடைந்ததாகக் காணப்படுகின்றது.

தமது பல்கலைக்கழகத்தின் பிராந்திய அடையாளத்தை கண்டிப்பான முறையில் பேண விரும்பும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களில் ஒரு பகுதியினர், வெளியில் இருந்து வரும் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிப்பதனைத் தவிர்க்கும் நோக்கிலே, ஆங்கில மொழி கற்கைநெறிகளைப் போதிக்கத் தயங்குகின்றனர். மேற்கூறிய இரண்டு பிராந்திய பல்கலைக்கழகங்களிலும் உள்ளூர் மாணவர்களே மிகவும் அதிக எண்ணிக்கையானோராக உள்ளனர். அத்துடன் மாணவர்கள் ஒருவருடன் ஒருவர் தமது சமூகங்களுக்கு வெளியே கலந்து பழகும் தன்மையும் இங்கு மிகக் குறைவாக உள்ளது. இந்தப் பல்கலைக்கழகங்களிலே சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானுடம்சார் கற்கைகளைக் கற்பிப்பது தொடர்பான பகுப்பாய்வுகளைச் செய்யும் போது, அங்கு இருக்கும் மாணவர்களின் சமூகப் பரம்பலின் விளைவுகளையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தினைப் பொறுத்த வரையில் அந்த பல்கலைக்கழகத்தின் தனிமையான அமைவிடமானது சாதகமான ஒன்றாக நோக்கப்படுகிறது. ஏனெனில் இந்த இடம் கொழும்பைப் போன்று கவனச் சிதறல்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. எனவே அங்கு ஒரு பல்கலைக்கழக சமூகத்தைக் கட்டியெழுப்புவது இலகுவாக இருக்கும். அங்கு கற்பிக்கப்படும் பெரும்பாலான சமூக விஞ்ஞான மற்றும் மானுடம்சார் துறைகளில் கற்கும் மாணவர்கள் குறைவளவான எண்ணிக்கையில் உள்ள காரணத்தால், அவர்கள் தங்களது துறைகளால் சிறப்பான முறையில் கவனத்தில் கொள்ளப்படுவதனையும், அவர்களது ஆசிரியர்களினால் வளர்த்தெடுக்கப்படுவதனையும் அவதானிக்க முடிகிறது.

பெரிய மற்றும் நிலைபேறு அடைந்த பல்கலைக்கழகங்களிலே நிலவும் பிரச்சினை என்னவெனில், அங்கு இருக்கும் மூத்த கல்வியாளர்களின் பழமைவாதமும், தற்போதைய நிர்வாகத்தால் முன்னெடுக்கப்படும் நவதாராளவாதத் தன்மையான நிகழ்ச்சித் திட்டங்களின் போது உருவாகும் சிக்கல்களுமே. மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் இடையிலான உறவுகளில் அவதானிக்கப்படும் இறுக்கமான அதிகாரப் படிநிலைத் தன்மை, இளம் விரிவுரையாளர்கள் பொதுவாக மூத்த விரிவுரையாளர்களின் முன்னாள் மாணவர்களாக இருப்பதன் மூலமாக உருவாகும் நிறுவன ரீதியான பாரம்பரியம் என்பவற்றின் காரணமாக, அங்கு இருக்கும் நிலைமையினை மாற்றியமைக்கும் வகையிலான சீர்திருத்தங்களுக்கு அங்கு பெரும்பாலும் ஆதரவு கிடைப்பதில்லை. படிவங்களை நிரப்புவதற்கும், உயர்கல்வியில் தற்போது முன்னெடுக்கப்படும் அளவுக்கதிகமான செயற்பாடுகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுவதற்குமான பொறுப்புச் சுமை இளைய ஆசிரியர்கள் மீது சுமத்தப்படுகின்ற தன்மையினை நாம் இந்தப் பல்கலைக்கழகங்களிலே காண்கிறோம். மூத்த ஊழியர்கள் தங்கள் வயது நிலையைக் காரணமாகக் காட்டி, இத்தகைய செயற்பாடுகளில் தம்மால் ஈடுபட முடியாது என்று சொல்லுவதனால், இளைய விரிவுரையாளர்களின் தோளில் கூடுதல் சுமை பலவந்தமாக சுமத்தப்படுகின்றது.

## முடிவுரை

மானுடம்சார் கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளிலே வழங்கப்படும் பட்டப்படிப்புகள் நாடு முழுவதும் அதிகளவிலான மாணவர் தொகையை கொண்டுள்ளதோடு, அந்தத் துறைகள் அடுத்த தலைமுறைக்கு கல்வி கற்பிப்பதில் பாரிய பங்களிப்பைச் செய்கின்றன. இருப்பினும், அத்தகைய கற்கைநெறிகளினால் வழங்கப்படக் கூடிய பங்களிப்பினை ஏற்று அங்கீகரிப்பதில் ஆர்வம் இல்லாதிருக்கும் ஒரு நிலைமையினையே நாம் அவதானிக்கின்றோம். இந்தக் காரணத்தினால் இந்தக் கற்கைநெறிகள் தமது சுயாதிபத்தியதுடன் முன்னேறிச் செல்வதற்கு மிகக் குறைந்த உதவியே வழங்கப்படுகிறது. இந்தத் துறைகளுக்கு எவ்வாறான ஆதரவு தேவை என்பதனைத் தீர்மானிப்பதிலே வேலைக்கு அமர்த்தக் கூடிய தன்மை பற்றிய கருத்தாடல்கள் மிகுந்த ஆதிக்கம் செலுத்துகின்றமை ஒரு வகையில் இந்தத் துறைகளுக்கு நன்மையாக அமையலாம். ஒரு கற்கைநெறியினைச் சிறந்த முறையில் நடாத்துவதற்கு சில அமைப்புகள், சட்டகங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள்

அவசியமானவையாக இருக்கின்றன. ஆனாலும், சிறப்பான முறையில் வழங்கப்படும் சமூக விஞ்ஞான மற்றும் மானுடம்சார் கற்கைகள் எப்படிப்பட்டனவாக இருக்கும், அவற்றினால் என்ன செய்ய முடியும் போன்ற விடயங்கள் பற்றி சிறிதளவு அல்லது எந்தவிதமான மதிப்பீடும் இல்லாமல், அர்த்தமற்ற முறையிலே சீர்திருத்தங்கள் முன்னிறுத்தப்படுகின்ற செயன்முறையானது, இந்தக் கற்கைநெறிகள் தொடர்பிலே எஞ்சியிருக்கும் நம்பகத்தன்மைக்கும் பாதகமாக அமைகின்றது. சீர்திருத்தச் செயன்முறைக்கு அடிநாதமாக இருக்கும் தர்க்கம் என்னவெனில் சமூகம் தொடர்பிலே தற்போது இருக்கும் அதிகாரப் படிநிலைகளை ஏற்றுக்கொள்ளுவதும், ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லைகளுக்குள் மாணவர்களினைப் பிரகாசிக்க வைக்கும் வகையில் அவர்களைத் தயார்படுத்துவதுமாகும். தற்போது நிலவும் அதிகாரக் கட்டமைப்பு என்பது தானாக உருவாகவில்லை என்பதனையும், அதற்கு ஒரு வரலாற்றுப் பின்னணி இருக்கின்றது என்பதனையும், அதனுள் அதிகாரப் பிளவுகள் இருக்கலாம் என்பதனையும் விளங்கிக்கொள்ளுவதற்கான திறனினை வளர்த்தெடுப்பதிலே மானுடம்சார் கற்கைகளும் சமூக விஞ்ஞானங்களும் பங்களிப்புச் செய்கின்றன. தற்போது முன்னெடுக்கப்படும் சீர்திருத்தங்களிலே அத்தகைய திறனை ஊக்குவிக்கும் எதுவித செயற்பாடுகளையும் காண முடியவில்லை. இந்த நாட்டில் சமூக விஞ்ஞானங்களும் மானுடம்சார் கற்கைகளும் செழிக்க வேண்டுமானால், சீர்திருத்த நிகழ்ச்சிநிரலை ஒரு விமர்சனப்பாங்கான மானுடம்சார் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைக் கண்ணோட்டத்தில் இருந்து நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இதுவாகும். இலங்கையில் இந்தக் கற்கைநெறிகள் பிரச்சினைகś எதிர்கொள்ளுகின்றன. இந்தத் துறைகளிலே அதிகமான மாணவர்கள் இருக்கின்ற போதும், இந்தத் துறைகளுக்குக் கிடைக்கும் வளங்களின் அளவும் ஆதரவும் மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும் இந்தத் துறைகளின் தரமும் வீழ்ச்சியடைந்தே உள்ளது. இந்தத் துறைகளின் முன்னேற்றத்துக்கு அவசர உதவி தேவைப்படுகின்றது. ஆனால் அந்த உதவியானது தவறான திசையில் வழங்கப்படுமாயின் அது வளங்களை வீணடிக்கும் ஒரு குற்றச் செயலாகவே அமையும்.

நான் இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் கன்னங்கராவினுடைய அறிக்கையை மேற்கோள்காட்டியிருந்தேன். நாடு சுதந்திரத்தை எதிர்பார்த்திருந்த காலகட்டத்திலே, கல்வியின் பங்கு பற்றி எவ்வாறு சிந்திக்கப்பட்டது என்பதனை அந்த அறிக்கை எமக்கு நினைவூட்டியது. இன்று கல்வி குறித்த கலந்துரையாடல்கள் சந்தையினால்

தீர்மானிக்கப்படும் நிலைமை உருவாகியுள்ளது. நாட்டின் கல்வி முறை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய விவாதம் மிகவும் குறுகிய முறையிலும், கல்வியினைக் கருவியாக நோக்கும் வகையிலுமே முன்னெடுக்கப்படுகின்றது. நாடும் உலகமும் எண்ணற்ற சவால்களை எதிர்கொள்கின்ற இன்றைய சூழலில், மீளெழுச்சியும், புதிய சிந்தனைக்கான வழிகளுமே எமக்குத் தேவைப்படுகின்றன. இந்த சவாலை எதிர்கொள்ளத்தக்க வகையில் எமது கல்வி முறையை மறுவடிவமைப்பு செய்ய வேண்டிய நேரம் இதுவாகும் .

**References**


Cannizzo, F. (2018) 'Tactical evaluations: everyday Neoliberalism in Academia', *Journal of Sociology,* 54(1), pp, 77-91.

Costa, R.C. (2019) 'The place of the humanities in today's knowledge society', *Palgrave Communications,* 5(1). doi: https://www.nature.com/articles/s41599-019-0245-6

Department of Census and Statistics – Sri Lanka. (2020) *Sri Lanka labour force statistics quarterly bulletin*. Available at: http://www.statistics.gov.lk/ Resource/en/LabourForce/ Bulletins/LFS_Q1_ Bulletin_2020 (Accessed: 30 March 2023).

Gyamera, G. O. and Burke, P. J. (2018) 'Neoliberalism and curriculum in higher education: a post-colonial analyses', *Teaching in Higher Education*, 23(4), pp. 450-467.

Jayawardena, D. (2017) 'The "MacBurger", non-State universities and the changing landscape of higher education in Sri Lanka', *Journal for Critical Education Policy Studies,* 15(3), pp. 213-240.

Krause-Jensen, J. and Garsten, C. (2014) 'Introduction: neoliberal turns in higher education', *Learning and Teaching: The International Journal of Higher Education in the Social Sciences,* 7(3), pp. 1–13.

Kumara, K. K. (2012) 'Social science and humanities education in Sri Lanka and its discontents: some reflections', *Dialogue,* 39, pp. 186-245.

Manurathna, P. (2018) 'University & co.: the neoliberal university and the challenges faced by arts faculties in Sri Lanka', *Dialogue,* New Series 40 & 41.

*Myth of unemployable graduates.* (2021) *The Island,* 1 June. Available at: https://island.lk/myth-of-unemployable-arts-graduates/ (Accessed: 30 March 2023).

National Audit Office. (2020) *Propensity to tend education under the arts stream and the unemployment of arts graduates*. Available at: http://www.auditorgeneral.gov.lk/web/ images/audit-reports/upload/2020/special_20/art/English-Report.pdf (Accessed: 30 March 2023)

Uyangoda, J. (2018) 'University governance and autonomy in Sri Lanka: changing contexts and directions', *Dialogue,* 45 & 46.